# 6

# இறைக்கொள்கையும் அரச நிதியும்

## 6.1 பொதுநோக்கு

*இறைக்கொள்கையானது 2020இன் ஆரம்ப காலப்பகுதியிலிருந்து மந்தமடைந்த பொருளாதாரத்தின் மீட்சியின் மீது கவனம் செலுத்தியிருந்தது. எனினும், அரசிறையின் வீழ்ச்சி மற்றும் அரச மீண்டெழும் செலவினத்தின் அதிகரிப்பு என்பவற்றின் ஊடாக ஏற்பட்ட வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையின் விரிவாக்கம் மற்றும் வெளிநின்ற மத்திய அரச படுகடனின் அதிகரிப்பு என்பவற்றால் பிரதிபலிக்கப்பட்டவாறு கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றிலிருந்தான பொருளாதாரப் பின்னடைவிற்கு மத்தியில் இறைப் பெறுபேறுகள் எதிர்பார்க்கைகளிலிருந்து விலகியிருந்தது. 2020இல் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறைக்கான நிதியீட்டத்தில் பெருமளவு உள்நாட்டு மூலங்களில் தங்கியிருந்தமையானது வெளிநாட்டு நிதியிடல் அனுகலின் மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் சவால் நிறைந்த உலகச் சந்தை நிலமைகளின் தாக்கம் என்பவற்றை பிரதிபலித்திருந்ததுடன் வெளிநாட்டு நிதியிடலின் தங்கியிருத்தலை குறைப்பதற்கான அரசாங்கத்தின் விருப்பத்தேர்வையும் வெளிப்படுத்தியிருந்தது. நிதியமைச்சின்படி, 2020இற்கான இறைத் துறைப் புள்ளிவிபரங்களின் தற்காலிக மதிப்பீடுகள் 2019இலிருந்து கொண்டு வரப்பட்ட கொடுப்பனவுகளின் நிலுவைகளுக்கு சீராக்கம் செய்யப்பட்டுள்ளன.[1] அதேவேளை, ஆண்டின் ஆரம்பப்பகுதியில் இருந்து 2020ஆம் ஆண்டிற்காக பாராளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டமொன்று இல்லாத நிலையில் கணக்கு வாக்கெடுப்பு மற்றும் அரசியல் யாப்பின் உறுப்புரை 150(3) ஏற்பாடுகளின் கீழான அதிமேதகு சனாதிபதியின் சட்டபூர்வமான அதிகாரவளிப்பு என்பவற்றினால் 2020இற்கான இறைத்தொழிற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. 2020 நவம்பரில் கணக்கு வாக்கெடுப்பு மற்றும் அதிமேதகு சனாதிபதியின் அங்கீகாரம் என்பவற்றை உள்ளடக்கி 2020இற்கான வருடாந்த வரவு செலவுத்திட்டமானது பாராளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்டது. 2020இல் இறை இடைவெளிகளில் வரையறை காணப்பட்ட போதிலும் அரசாங்கமானது மிகவும் சவாலான சூழலில் நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிநபர்களுக்கு தொடர்ந்தும் ஆதரவளித்திருந்தது. முன்னோக்கிப் பார்க்கையில், குறைந்தளவான அரசிறை சேகரிப்புக்கள் மற்றும் பாரியளவான வெளிநாட்டு நாணய படுகடன் தேவைப்பாடுகள் என்பவற்றின் காரணமாக இறைத் துறைக்கான குறுங்கால இடர்நேர்வுகள் உயர்ந்தளவில் காணப்பட்டது. வரவு செலவுத்திட்டத்தின் தொடர்ச்சியான விலகல்கள் மற்றும் மத்திய அரசாங்க வெளிநின்ற படுகடனின் உயர்ந்த மட்டம் என்பன அரசாங்கத்தின் தேசிய கொள்கை சட்டகத்தால் வலியுறுத்தப்பட்டவாறு இறைத்திரட்சியை நோக்கிய உறுதியான அர்ப்பணிப்பை உத்தரவாதப்படுத்துகின்றது.*

1 இவ்வறிக்கையில் விபரிக்கப்பட்டுள்ள 2019 மற்றும் 2020இற்கான அரசிறை, செலவினம் மற்றும் இறை மீதிகளின் மதிப்பீடுகள் நிதியமைச்சிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளுக்கிணங்க கொடுப்பனவு நிலுவைகளுக்கான சீராக்கங்களை உள்ளடக்குகின்றது.

## 6.2 இறைக் கொள்கை வழிமுறைகள்[2]


**இறைக் கொள்கையின் போக்கு மற்றும் வழிமுறைகள் என்பன 2020ஆம் ஆண்டில் பரந்தளவில் நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிநபர்களை ஆதரவளிப்பதனை நோக்காகக் கொண்டிருந்த அதேவேளை பொருளாதார நடவடிக்கைகளின் மீட்சிக்கு வசதியளித்திருந்தது.** 2020இன் ஆரம்பத்திலிருந்து வரி வீதங்களை குறைப்பதன் ஊடாக பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தம் நோக்கில் அரசாங்கத்தால் அமுல்படுத்தப்பட்ட கொள்கைகளும் நோய்த்தொற்றின் பாதகமான தாக்கத்தைக் குறைப்பதற்கு உதவியிருந்தது. 2020ஆம் ஆண்டிற்கான இறைத் தொழிற்பாடுகள் 2019 நவம்பரில் சனாதிபதி தேர்தல் நடைபெற்றமையினைத் தொடர்ந்து அரசின் தேசிய வரவு செலவுத்திட்டத்தைச் சமர்ப்பிப்பதற்கான நிர்வாக ரீதியான தாமதத்தின் காரணமாக 2020ஆம் ஆண்டிற்காக பாராளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டமொன்று இல்லாத நிலையில் கணக்கு வாக்கெடுப்பு மற்றும் அரசியல் யாப்பின் உறுப்புரை 150(3) ஏற்பாடுகளின் கீழான அதிமேதகு சனாதிபதியின் சட்டபூர்வமான அதிகாரவளிப்பு என்பவற்றினால் மேற்கொள்ளப்பட்டன. கணக்கு வாக்கெடுப்பின் கீழான செலவினம் மற்றும் முற்பணங்களுக்கான வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகள், கடன் பெறுகைகள் மற்றும் 2020இற்கான அதிமேதகு சனாதிபதியின் அங்கீகாரம் என்பன 2020 நவம்பரில் ஒருங்கிணைந்த வகையில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் 2020இற்கான ஒப்புதலளிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகள் 2020இல் 6 ஒதுக்கீட்டு சட்டமூலத்தில் வெளியிடப்பட்டு 2020 நவம்பர் 20ஆம் திகதி[3] வர்த்தமானியிடப்பட்டது. அதேவேளை, 2021இற்கான ஒதுக்கீட்டு சட்டமூலம் 2020 திசெம்பர் 10ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. ஆண்டு காலப்பகுதியில் “நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு” என்ற அரசாங்கத்தின் தேசிய கொள்கைச் சட்டகத்தில் எடுத்துரைக்கப்பட்டவாறு வறுமையைத் தணித்தல் மற்றும் பொருளாதார மீளெழுச்சி என்ற 2020-2025இற்கான நடுத்தரகால நிகழ்ச்சித்திட்டம் மீது அரசாங்கம் கவனம் செலுத்தியிருந்தது. அதற்கிணங்க, சந்தைப் பொருளாதாரமொன்றின் சட்டகத்திற்குள் வசதிப்படுத்தப்பட்ட உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நோக்கிய பொருளாதாரம் என்பவற்றின் அடிப்படையில் மக்களின் பொருளாதார சுதந்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் விரும்புகின்றது. மேலும், அரசாங்கம் வெளியக படுகடன் பணிக்கொடுப்பனவு கடமைப்பாட்டை நிறைவேற்றுவதற்காக அந்நியச் செலாவணி உட்பாய்ச்சல்களை பாதுகாப்பதற்கான தேவைப்பாட்டை அடையாளப்படுத்தியிருந்த அதேவேளை பன்முகப்படுத்தலின் ஊடாக ஏற்றுமதி வருவாயை மேம்படுத்தும் நோக்கில் சமனிலையான வர்த்தகக் கொள்கையின் அவசியத்தை ஊக்குவிக்க வேண்டியதன் தேவைப்பாட்டை வலியுறுத்தியிருந்தது. இதற்கு மேலாக, அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறைக்கான நிதியீட்டத் தந்திரோபாயமானது உள்நாட்டு நிதியிடல்களை சேகரிப்பதனை நோக்கி நகர்வடைந்திருந்ததுடன் அதனூடாக முன்னோக்கிய காலப்பகுதியில் வெளிநாட்டுப் பொறுப்புக்களுக்கான வெளிக்காட்டுந்தன்மையை குறைவடையச் செய்யும்.

**அரசாங்கத்தின் இறை தந்திரோபாயங்கள் நடுத்தர காலத்தில் நிலைத்து நிற்கும் மற்றும் உயர் பொருளாதார வளர்ச்சி என்பவற்றை உறுதிப்படுத்துவதன் மீது கவனம் செலுத்தியிருந்தது.** அரசாங்கத்தின் ஒட்டுமொத்த அபிவிருத்தி தூண்டலின் ஒருங்கிணைந்த பகுதியொன்றாக பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பை முன்னேற்றுவதானது அடையாளங் காணப்பட்டிருந்தது. இதனை அடைந்துகொள்வதற்கு பொது முதலீடானது நடுத்தர காலத்தில் வருடாந்தம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அண்ணளவாக 5.0 - 6.0 சதவீதத்திற்குள் பேணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. தேசிய கொள்கைச் சட்டகத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு சமூகத்தின் வெவ்வேறுபட்ட மக்களின் வருமானச் சமமின்மை பிரச்சினையை தீர்ப்பதற்காக அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயலாற்றியிருந்தது. நோய்த் தொற்றின் காரணமாக ஏற்பட்ட சவால்களுக்கு மத்தியில் வீதிகள், வீடமைப்பு, மின்சாரம் மற்றும் வலு, கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பவியல் போன்ற வெவ்வேறுபட்ட பொருளாதார துறைகளில் காணப்படும் உட்கட்டமைப்பு இடைவெளியை குறைத்தலானது அரசாங்கத்தின் முன்னுரிமையாகக் காணப்பட்டது. அரசாங்கம் தற்போது செயற்படுத்தப்படுகின்ற வெளிநாட்டு நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களை மீளாய்வு செய்வதற்காகவும் அவற்றை அரசாங்கத்தின் முன்னுரிமைக்கு ஏற்றவகையில் நெறிப்படுத்துவதற்காகவும் வழிமுறைகளை எடுத்திருந்தது. மேலும், வெளிநாட்டு முதலீட்டின் ஊடாக அமுல்படுத்தக்கூடிய செயற்றிட்டங்களை அடையாளம் காண்பதற்காக வழிமுறைகள் எடுக்கப்பட்டிருந்ததுடன் அதன் ஊடாக அரசாங்கத்தின் படுகடன் சுமைகள் குறைவடையக் கூடும். தேசிய கொள்கைச் சட்டகம் மற்றும் 2021இற்கான தேசிய வரவு செலவுத் திட்டம் என்பவற்றிற்கேற்ப பொருளாதார வளர்ச்சிக்கான தனியார் துறையின் பங்களிப்பை மேம்படுத்துகின்ற அரச தனியார் பங்குடமையை அறிமுகப்படுத்துவதன் மீது அதிகளவான வலியுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன.

2 இப்பிரிவில் கலந்துரையாடப்படும் முக்கிய இறைக் கொள்கை வழிமுறைகள் சிறப்புக் குறிப்பு 10 ‘முக்கியப் பொருளாதார கொள்கை வழிமுறைகளில்’ விரிவாக தரப்பட்டுள்ளது.


3 அரசியலமைப்பு உறுப்புரை 150(3) கீழ் அதிகாரமளிக்கப்பட்ட 150(2)இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட குறிப்பிட்ட சில செலவினம் மற்றும் முற்பணங்கள் 2020இற்கான ஒதுக்கீட்டு சட்டமூலத்தில் முதலாம் நிரல், இரண்டாம் நிரல் மற்றும் மூன்றாம் நிரல் என்பவற்றில் உள்ளடக்கப்பட்ட அதேவேளை உறுப்புரை 150(2)இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையிலான கடன் பெறுகைகள் 2020இற்கான ஒதுக்கீட்டு சட்டமூலத்தின் பிரிவு 2(1)(ஆ)இன் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

வரைபடம் 6.1
இறைத்துறையின் செயலாற்றம்




6

வரைபடம் 6.2
முக்கிய இறைக் குறிக்காட்டிகள்
(மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக)




(அ) நிதி அமைச்சிற்கமைய 2019இற்கான இறைத்துறைப் புள்ளிவிபரங்கள் 2020இற்கான வரவுசெலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு மீள்குறிப்பிடப்பட்டுள்ளது.

*மூலம்:* நிதி அமைச்சு

**அரசாங்கமானது வியாபாரங்கள் மற்றும் தனிநபர்கள் ஆகியோரின் வரிச்சுமைகளை குறைப்பதற்காக வழிமுறைகளை அமுல்படுத்தியிருந்ததுடன் அதன் ஊடாக பொருளாதார நடவடிக்கைகளின் மீட்சி மற்றும் மக்களின் வருமானத்தை முன்னேற்றல் என்பவற்றிற்கும் ஆதரவளித்திருந்தது.** 2019இன் இறுதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட முக்கிய வரிச் சீர்த்திருத்தங்கள் வருமான வரி வீதங்கள் மற்றும் பெறுமதி சேர் வரி என்பவற்றைக் குறைத்தல், பெறுமதி சேர் வரியின் எல்லையை அதிகரித்தல், தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் பொருளாதார பணிக் கொடுப்பனவுகளை நீக்குதல் போன்றவற்றை உள்ளடக்கியிருந்தது. இவ்வழிமுறைகள் குறுங்காலத்தில் அரசாங்கத்தின் வருமானம் மீது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய போதிலும் பொருளாதார நடவடிக்கைகளின் வலுவான மீட்சிக்கு ஆதரவளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. அரசாங்கம் நடுத்தர காலத்தில் பேணப்படக்கூடிய குறைந்தளவான வரி வீதங்களுடன் பொருளாதார நடவடிக்கைகளின் எதிர்பார்க்கப்பட்ட விரிவாக்கம் மற்றும் நிலைத்து நிற்கும் பொருளாதார வளர்ச்சியிலிருந்தான நன்மைகள் என்பவற்றின் விளைவாக அரசிறைச் சேகரிப்பானது நடுத்தர காலத்தில் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.



**2019 இறுதியில் முன்மொழியப்பட்ட சீராக்கத்திற்கு இணங்கிச்செல்லும் வகையில் 2017 இல 24 உண்ணாட்டரசிறைச் சட்டத்திற்கான திருத்தங்கள் 2020 காலப்பகுதியில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இது வியாபாரங்கள் மற்றும் தனிநபர்களுக்கு ஆதரவினை வழங்குகின்ற அதேவேளை வரிக்கட்டமைப்பை எளிமைப்படுத்துவதனை இலக்காக கொண்டிருந்தது.**[4] இவ்வறிக்கையின் சிறப்புக் குறிப்பு 10இன் "முக்கிய பொருளாதார கொள்கை வழிமுறைகள்" இல் விரிவாக குறிப்பிடப்பட்டவாறு தனிநபர் வரி வீதங்கள், வரி விலக்கு மட்டங்கள் மற்றும் வருமான வரி கணிப்பீட்டிற்கான எல்லை என்பவற்றிற்கான திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன.

4 2019இன் இறுதியில் உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டவாறு, வரிச்சீர்த்திருத்தங்கள் பாராளுமன்றத்தின் ஒப்புதலுக்கு உட்பட்டு 2020 சனவரி 01இலிருந்து அமுல்படுத்தப்பட்டன. பொருளாதார பணிக்கொடுப்பனவுகள் நீக்கப்பட்டதன் பின்னர் 2020 இல 4 பொருளாதார பணிக்கொடுப்பனவு திருத்தச் சட்டமானது 2020 ஒக்டோபர் 12இல் சட்டமாக்கப்பட்டது. மேலும், 2002 இல 14 பெறுமதிச்சேர் வரித்திருத்தத்திற்கான சட்டமூலம் 2021 மார்ச் 18ஆம் திகதி வர்த்தமானியிடப்பட்டது.

அட்டவணை 6.1
அரசின் இறைத் தொழிற்பாடுகளின் சுருக்கம்

| விடயம் | 2019 (அ) | 2020 (ஆ) |
|---|---|---|
| ரூபா. மில்லியன் | | |
| **மொத்த அரசிறை மற்றும் கொடைகள்** | **1,898,808** | **1,373,308** |
| மொத்த அரசிறை | 1,890,899 | 1,367,960 |
| வரி அரசிறை | 1,734,925 | 1,216,542 |
| வரியல்லா அரசிறை | 155,974 | 151,417 |
| கொடைகள் | 7,909 | 5,348 |
| **செலவினமும் தேறிய கடன் வழங்கலும்** | **3,337,896** | **3,040,996** |
| மீண்டெழும் | 2,424,582 | 2,548,359 |
| நிதி அமைச்சிற்கு ஏற்றவாறான முற்கொடுப்பனவுகளுக்கான சீராக்கங்கள் | 123,428 | -123,428 |
| மூலதனமும் தேறிய கடன் வழங்கலும் | 913,314 | 492,638 |
| இதில் அரச முதலீடு | 631,235 | 811,773 |
| நிதி அமைச்சிற்கு ஏற்றவாறான முற்கொடுப்பனவுகளுக்கான சீராக்கங்கள் | 299,178 | -299,178 |
| **நடைமுறைக்கணக்கு மீதி** | **-533,683** | **-1,180,399** |
| **ஆரம்ப மீதி** | **-537,736** | **-687,386** |
| **திரண்ட இறை மீதி** | **-1,439,088** | **-1,667,688** |
| **மொத்த நிதியிடல்** | **1,439,088** | **1,667,688** |
| வெளிநாட்டு நிதியிடல் | 542,641 | -83,199 |
| உள்நாட்டு நிதியிடல் | 896,448 | 1,750,887 |
| மொ.உ.உ இன் சதவீதமாக (இ) | | |
| **மொத்த அரசிறை மற்றும் கொடைகள்** | **12.6** | **9.2** |
| மொத்த அரசிறை | 12.6 | 9.1 |
| வரி அரசிறை | 11.6 | 8.1 |
| வரியல்லா அரசிறை | 1.0 | 1.0 |
| கொடைகள் | 0.1 | 0.04 |
| **செலவினமும் தேறிய கடன் வழங்கலும்** | **22.2** | **20.3** |
| மீண்டெழும் | 16.1 | 17.0 |
| நிதி அமைச்சிற்கு ஏற்றவாறான முற்கொடுப்பனவுகளுக்கான சீராக்கங்கள் | 0.8 | -0.8 |
| மூலதனமும் தேறிய கடன் வழங்கலும் | 6.1 | 3.3 |
| இதில் அரச முதலீடு | 4.2 | 5.4 |
| நிதி அமைச்சிற்கு ஏற்றவாறான முற்கொடுப்பனவுகளுக்கான சீராக்கங்கள் | 2.0 | -2.0 |
| **நடைமுறைக்கணக்கு மீதி** | **-3.6** | **-7.9** |
| **ஆரம்ப மீதி** | **-3.6** | **-4.6** |
| **திரண்ட இறை மீதி** | **-9.6** | **-11.1** |
| **மொத்த நிதியிடல்** | **9.6** | **11.1** |
| வெளிநாட்டு நிதியிடல் | 3.6 | -0.6 |
| உள்நாட்டு நிதியிடல் | 6.0 | 11.7 |

(அ) நிதியமைச்சின்படி, 2019இற்கான இறைத்துறை புள்ளிவிபரங்கள் 2020இற்கான வரவு செலவுத்திட்ட உரையில் அறிவிக்கப்பட்டவாறு மீள்குறிப்பிடப்பட்டன.
(ஆ) தற்காலிகமானது
(இ) 2019இற்கான தரவிற்கு 2021 மார்ச் 16ஆம் நாளான்று தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

*மூலம்:* நிதி அமைச்சு

**2019இன் இறுதிப்பகுதியிலிருந்து அமுல்படுத்தப்பட்ட இறைத் தூண்டல் வழிமுறைகள் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட வரிச்சலுகைகளை மீளவலியுறுத்தியிருந்ததுடன் அத்தகைய வரிச் சலுகைகள் 2020இல் வியாபாரங்கள் மற்றும் தனிநபர்கள் மீதான நோய்த்தொற்றின் பாதகமான தாக்கத்தினைக் குறைத்திருந்தது.** 2019ஆம் ஆண்டின் பிற்பகுதியில் வழங்கப்பட்ட பெரும் சலுகைகளுக்கு மேலதிகமாக 2020ஆம் ஆண்டில்

அறிமுகப்படுத்தப்பட்ட முக்கியச் சலுகைகள் தெரிவு செய்யப்பட்ட சுகாதாரத்துடன் தொடர்புடைய கருவிகளின் இறக்குமதி மீதான கப்பல் மற்றும் வானூர்தி அபிவிருத்தித் தீர்வை மற்றும் செஸ் வரி என்பவற்றின் விலக்கல், பிடித்துவைத்தல் வரி மற்றும் பெறுமதி சேர் வரி என்பவற்றின் செலுத்தல் காலப்பகுதியின் விரிவாக்கம் மற்றும் முடக்கல் காலப்பகுதியின் போதான அனைத்து வரிகளின் மீதான தண்டப்பணத்தின் விலக்கலின் போக்கு என்பவற்றை உள்ளடக்கியிருந்தது. மேலும், சிறிய மற்றும் நடுத்தரளவான தொழில் முயற்சிகளுக்கு மதிப்பீட்டு ஆண்டு 2018/2019 வரை வெளியிடப்பட்ட வருமான வரி நிலுவைகளின் விலக்கல், 2019/2020 மதிப்பீட்டாண்டிற்கான மேலதிக மதிப்பீடுகள் வெளியிடாமை, நிலுவைத்தொகை/ செலுத்தத் தவறுதல் போன்றவற்றின் தீர்ப்பனவிற்கான சலுகைக் காலத்தை வழங்கல், பறிமுதல் அறிவிப்புக்களின் நீடிப்பு மற்றும் வரி செலுத்தல் மற்றும் வரி விண்ணப்பங்களை பூரணப்படுத்தல் என்பவற்றிற்கு வழங்கப்பட்ட காலக்கெடு நீடிப்பு போன்றவற்றின் வடிவில் வெவ்வேறுபட்ட வரி நிவாரண வழிமுறைகள் வழங்கப்பட்டன. 2021இற்கான தேசிய வரவுசெலவுத் திட்டமானது வரி விலக்கு, குறிப்பிட்ட சில வியாபாரங்களுக்கான வருமான வரியின் குறைப்பு, வரிக் கணிப்பீடுகளின் எளிமையாக்கல் மற்றும் வரி நிர்வாகத்தை செயற்படுத்தல் போன்றன உள்ளடங்கலாக மேலதிக வரி வழிமுறைகளை முன்மொழிந்திருந்தது.[5]

**நோய்த்தொற்றிற்கு மத்தியில் சென்மதி நிலுவை மற்றும் நாணய மாற்று வீதம் என்பவற்றின் மீதான அழுத்தங்களை இலகுபடுத்தும் அதேவேளை நிலையான விலையைப் பேணும் நோக்கில் சர்வதேச வர்த்தகத்துடன் தொடர்புடைய வரிகளுக்குச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.** அதன்படி, ஆண்டு காலப்பகுதியில் சுங்கத் தீர்வை தொடர்பில் மேல்நோக்கிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் உள்நாட்டு சில்லறை விலைகளை அதே மட்டத்தில் பேணுவதற்காக பெற்றோல் மற்றும் டீசல் என்பவற்றின் இறக்குமதி மீது மேலதிக தீர்வைக் கட்டணங்கள் விதிக்கப்பட்டன. புகையிலை உற்பத்திகள் உள்ளடங்கலாக சில விடயங்கள் மீதும் சுங்கத் தீர்வையானது 25-50 சதவீத வீச்சுக்குள் அதிகரிக்கப்பட்டது. 2020 நவம்பர் 18 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இறக்குமதிச் செய்யப்பட்ட பண்டங்கள் மீதான சுங்கத் தீர்வையானது 0 சதவீதம், 15 சதவீதம் மற்றும் 30 சதவீதத்திலிருந்து 0 சதவீதம், 10 சதவீதம் மற்றும் 15 சதவீதத்திற்கு எளிமைப்படுத்தப்பட்டது. செஸ், கப்பல் மற்றும் வானூர்திக் கட்டணங்கள் மீது வழங்கப்பட்ட விலக்கல்களுக்கு மேலதிகமாக உள்நாட்டுச் சந்தை விலைகளில் தளம்பல்களை குறைக்கின்ற அதேவேளை உள்நாட்டு உற்பத்தியாளர்களை ஆதரவளிக்கும் நோக்கில் குறிப்பிட்ட சில அத்தியாவசிய மருத்துவ உபகரணங்கள் மீதான சிறப்புப் பண்டத் தீர்வையானது திருத்தப்பட்டது.

5 2017 இல 24 உண்ணாட்டரசிறைச் சட்டத்திற்கான திருத்தங்களை உள்ளடக்கிய சட்டமூலமானது 2021 மார்ச் 18ஆம் திகதி வர்த்தமானியிடப்பட்டது.

**வரி நிர்வாகத்தைப் பலப்படுத்தும் நோக்கில் 2020 காலப்பகுதியில் பல்வேறுபட்ட வழிமுறைகள் ஆரம்பிக்கப்பட்டன.** இலங்கைச் சுங்கத்தின் சுங்கத் தரவுகளுக்கான தன்னியக்க முறைமையின் நவீனமயமாக்களுடன் தன்னியக்க செயன்முறைகள் விரைவுபடுத்தப்பட்டன. இலங்கை சுங்கத்திற்கு நேரடியாக சமூகமளிக்காமல் ஆவணங்களை இறக்குமதியாளர்கள் சமர்ப்பிப்பதற்கு இயலச்செய்யும் வகையில் சுங்கத் தரவுகளுக்கான தன்னியக்க முறைமையானது நவீனமயப்படுத்தப்பட்டது. ஒருங்கிணைந்த திறைச்சேரி முகாமைத்துவ தகவல் முறைமையின் கீழ் நிதியமைச்சிற்கு நாளாந்த வருவாயை அறிக்கையிடும் நோக்கில் இலங்கைச் சுங்கத்தில் வருமான அறிக்கையிடல் தொகுதியொன்று விருத்திசெய்யப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த திறைச்சேரி முகாமைத்துவ தகவல் முறைமையுடன் பொதுத்திறைச்சேரியின் அனைத்து திணைக்களங்கள், பாராளுமன்றம், தேசியக் கணக்காய்வு அலுவலகம் உள்ளடங்கலாக ஏனைய செலவீட்டு முகவர்கள் 2020இல் ஒருங்கிணைக்கப்பட்டதுடன் 2021 யூன் மாதத்திலிருந்து மேலும் சில செலவீட்டு முகவர்கள் ஒருங்கிணைக்கப்படவுள்ளன. வரி வருவாய் சேகரிப்பைப் பலப்படுத்தும் நோக்கில் இணையவழிக் கொடுப்பனவு தளத்தின் ஊடாக உண்ணாட்டரசிறைத் திணைக்களமானது மாற்று வரிச் செலுத்தல் முறைமையொன்றினை அறிமுகப்படுத்தியிருந்த அதேவேளை வரிச்செலுத்துவர்களின் அடையாள இலக்கங்களை வெளியீடு செய்தல், இறக்குமதியாளர்களுக்கான பெறுமதிசேர் வரியினை தற்காலிகமாக பதிவுசெய்தல் போன்றவற்றை உள்ளடக்கி பல்வேறுபட்ட பொதுப்பணிகளை இணையவழியின் ஊடாக நடாத்தியிருந்தது. அரசிறை நிருவாக முகாமைத்து தகவல் முறைமையின் கீழ் முத்திரைத் தீர்வை சேகரிப்பின் தன்னியக்கமானது 2020இல் நிறைவுசெய்யப்பட்டது.

**வாகனங்கள் மற்றும் கட்டிடங்களின் கொள்வனவு போன்ற விடயங்கள் மீதான செலவினக் குறைப்புக்கள் உள்ளடங்கலாக அரசாங்கத்தின் செலவினக் குறைப்பு வழிமுறைகள் 2020இல் தொடர்ந்தது. நோய்த்தொற்றுக்கு மத்தியில் அரசிறைச் சேகரிப்பின் பலவீனத்தன்மையின் பின்னனியில் அரச செலவினை முகாமைசெய்வதற்காக பல வழிமுறைகள் தொடங்கப்பட்டன.** 2020 காலப்பகுதியில் அனைத்து அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் அத்தியாவசியமற்ற செலவினங்களை தவிர்க்க வேண்டிய அதேவேளை பகிர்ந்தளிக்கப்பட்ட ஒதுக்கீட்டிற்குள் தங்களது செலவினை மட்டுப்படுத்திக்கொள்ள வேண்டுமென அறிவுறுத்தப்பட்டன. அதேவேளை, இலத்திரனியல்-பெறுகை மற்றும் இலத்திரனியல்-தேசிய அடையாள அட்டை என்பவற்றின் சுழற்சி உள்ளடங்கலாக முறைமைகள் மற்றும் செயன்முறைகள் என்பவற்றின் டிஜிட்டல் மயமாக்கம் தொடர்ந்திருந்தது. மேலும், அனைத்து அரசத் துறை அதேபோன்று தனியார் துறை என்பவற்றின் சம்பளக் கட்டமைப்பை மீண்டும் மீள்பரிசீலிக்கும் நோக்கில் 2020

6

பெப்ரவரி மாதத்தில் தேசிய கொடுப்பனவு ஆணைக்குழுவானது தாபிக்கப்பட்டதுடன் தேசிய கூலிக் கொள்கையொன்றை உருவாக்கி அமுல்படுத்தப்படல் வேண்டுமென அரசாங்கத்திற்கு இவ்வாணைக்குழு ஆலோசனைகளை வழங்கியிருந்தது.

**ஓய்வூதிய கொடுப்பனவு செயன்முறையானது கொவிட்-19 நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் பல்வேறுபட்ட வினைத்திறனை மேம்படுத்தும் வழிமுறைகளின் ஊடாக நெறிப்படுத்தப்பட்டது.** டிஜிட்டல் ஆயுள் சான்றிதழ் செயற்றிட்டமானது 2020இன் முதலரைப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டதுடன் அதனூடாக ஓய்வூதியம் பெறுவோர் தற்போதுள்ள ஆவணப்படுத்தல் செயன்முறைக்குப் பதிலாக கைரேகைகளைப் பயன்படுத்தி தங்களது ஆயுள் சான்றிதழ்களை வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். ஓய்வூதியம் பெறுவோரின் வதிவிடம்/ஆயுளை உறுதிப்படுத்துவதற்காக வருடாந்தம் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைக்க வேண்டிய ஆயுள் சான்றிதழ்களின் தேவைப்பாட்டை இது முடிவுறுத்துகின்றது. இதற்கு மேலாக, உடல் அல்லது உள ரீதியான சுகாதார பிரச்சினைகளிலிருந்து தோற்றம் பெறுகின்ற கடினத்தன்மையின் காரணமாக நேரடியாக ஓய்வூதியக்காரர்கள் ஓய்வூதியங்களை பெற்றுக்கொள்வதற்கு முடியாத சந்தர்ப்பங்களில் ஓய்வூதியக்காரர்கள் பாதுகாவலர் ஒருவரை நியமிப்பதற்கான வசதிகள் வழங்கப்பட்டிருந்தன. மேலும், கொடுப்பனவுச் செயன்முறையின் துல்லியம் மற்றும் வினைத்திறன் என்பவற்றை உறுதிப்படுத்தும் நோக்கில் வெப்தளத்தை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டமொன்று அறிமுகப்படுத்துவதன் ஊடாக விதவைகள் மற்றும் அநாதைகளுக்கான ஓய்வூதிய நடைமுறைப்படுத்தலானது பிரதேசச் செயலகங்களுக்கு ஒப்படைக்கப்பட்டன.

6

**குறைந்த வருமானம் பெறும் வீட்டுத்துறையினரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் மற்றும் பொருளாதாரத்திற்கான பொதுத்துறையின் பங்களிப்பை மேம்படுத்தல் என்பவற்றை அடைந்துகொள்ளும் நோக்கில் அரசதுறை ஆட்சேர்ப்பு நிகழ்ச்சித்திட்டமானது ஆரம்பிக்கப்பட்டது.** அரசாங்கம் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களிலிருந்தான 100,000 தேர்ச்சியற்ற தனிநபர்களை ஆட்சேர்க்கும் நோக்கில் 2020 சனவரியில் ஆட்சேர்ப்பு நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்திருந்த அதேவேளை கடந்த மூன்று வருடங்களாக தொழிலின்றி காணப்பட்ட 50,000 வேலையற்றப் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரிகளுக்குத் தொழில் வாய்ப்புக்களை வழங்கும் நோக்கில் 2020 பெப்புரவரி மாதத்தில் மற்றுமொரு ஆட்சேர்ப்பு நிகழ்ச்சித்திட்டத்தையும் ஆரம்பித்திருந்தது. 2020 ஓகத்தில் இடம்பெற்ற பொதுத் தேர்தலுக்கான அறிவிப்பினைத் தொடர்ந்து இவ்வாட்சேர்ப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் 2020 மார்ச்சில் இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் மேலதிகமாக 10,000 பட்டதாரிகளை ஆட்சேர்ப்பதற்கான அமைச்சரவையின் அனுமதியுடன் 2020 செத்தெம்பரில் மீள ஆரம்பிக்கப்பட்டன.

**நலன்புரி நன்மைகள் சபையின் தொழிற்பாடுகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகளுடன் கூடிய சமூகத்திலுள்ள தேவையான பிரிவினருக்கு அரசாங்கத்தின் நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்ந்தும் வசதியளித்திருந்தன.** கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக 2020 ஏப்பிரல் மற்றும் மே மாதங்களில் மூத்தப் பிரசைகள், மாற்றுத்திறனாளிகள், சிறுநீரக நோயாளிகள், வேளாண்மையாளர்கள் மற்றும் இடம்பெயர்ந்த நாளாந்தக் கூலிபெறுவோர் ஆகியோருக்கு ரூ.5,000 கொடுப்பனவு வழங்கப்பட்டது. 2020இல் முடக்கல் காலப்பகுதியில் சமுர்த்திப் பயனாளிகளுக்கு வட்டியற்ற ரூ.10,000 முற்பணத்தினை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் பொதுப் பயன்பாடுகளுக்கான பட்டியல்களைக் கொடுப்பனவு செய்வதற்காக பொதுமக்களுக்கு ஒரு மாத சலுகைக்காலம் வழங்கப்பட்டிருந்தது. மேலும், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினைத் தடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அலுவலர்கள், முப்படையினர், அரச ஊழியர்கள் மற்றும் சுகாதாரத் துறையிலுள்ள அலுவலர்களுக்கான அக்கிரகாரக் காப்புறுதி நன்மைகள் அதிகரிக்கப்பட்டிருந்தன. நலன்புரி நன்மைகள் சபை, அரசாங்கத்தின் நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களுடன் தொடர்புடைய தகவல்களைச் சேமித்து வைக்கும் இலத்திரனியல் தரவுத் தளமொன்றான சமூகப் பதிவுத் தகவல் முறைமையின் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு அவசியமான தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக சமுர்த்தித் திணைக்களத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கையெழுத்திட்டிருந்தது. வெவ்வேறுபட்ட நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான பயன்பெறுநர்களைத் தெரிவு செய்யும் நடைமுறைகளை மேம்படுத்துவதற்காக சமூகப் பதிவுத் தகவல் முறைமையை ஒருங்கிணைக்கப்பட்ட நலன்புரி முகாமைத்துவ முறைமைக்குள் விரிவாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. சமுர்த்திப் பெறுநர்கள், அவர்களது வருமானங்களை மேம்படுத்துவதற்கும் நலன்புரி நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து வெளியேறிச் செல்வதற்கும் ஆதரவளிக்கும் வகையில் நலன்புரி நிகழ்ச்சித்திட்டத்திற்கான முன்னேற்றக் கொள்கையொன்றினை விருத்திச் செய்வதனையும் நடைமுறைப்படுத்துவதனையும் நோக்காகக் கொண்ட "பயனாளிகளை வலுப்பெறச் செய்தல் தேசிய மூலோபாயத் திட்டத்தை" நிறுவுவதற்குச் சமுர்த்தித் திணைக்களம் உத்தேசித்துள்ளது.

**அரசின் மீதான சுமைகளைக் குறைக்கின்ற அதேவேளை அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் நிதியியல் ஆற்றலினை மேம்படுத்துவதற்காகப் பல்வேறு வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.** இவ்வாறான நிறுவனங்களில் நிதியியல் ஆற்றலை வலுப்படுத்தும் பொருட்டு அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் முக்கிய பதவிகளுக்குப் பொருத்தமான நபர்களை நியமிப்பதற்காக

2020இன் ஆரம்பத்தில் விசேட குழுவொன்று நிறுவப்பட்டது. உள்நாட்டுப் பெற்றோலிய விலைகளைத் திருத்துவதனை விட பொருளாதாரத்தில் பன்னாட்டு எண்ணெய் விலைகளில் வழமைக்கு மாறான வீழ்ச்சியிலான அனுகூலங்களின் சமமான பகிர்ந்தளிப்புக்களை நிச்சயப்படுத்தும் பொருட்டு எரிபொருள் விலை உறுதிப்பாட்டு நிதியமானது நிறுவப்பட்டது. அதற்கமைய, 2020 மார்ச் 23ஆம் திகதி மத்திய வங்கிக்கு திறைசேரி உண்டியல்களை (முகப்பெறுமதி அடிப்படையில்) வெளியீடு செய்வதன் ஊடாக ரூ.50 பில்லியன் ஆரம்ப மூலதனத்துடன் நிதியம் நிறுவப்பட்டது. பெற்றோல் மற்றும் டீசல் இறக்குமதிகள் மீதான மேலதிகக் கட்டணத்திலிருந்து சேகரிக்கப்பட்ட அரசிறையானது எரிபொருள் விலை உறுதிப்பாட்டு நிதியத்திற்கு மாற்றப்பட்டது. 2020 ஆண்டு காலப்பகுதியில் இலங்கை மின்சார சபையினால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படவேண்டிய கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்காக எரிபொருள் விலை உறுதிப்பாட்டு நிதியமானது பகுதியளவில் பயன்படுத்தப்பட்டதுடன் 2020இன் இறுதியில் இந்நிதியமானது ரூ. 379.1 மில்லியன் பெறுமதியான மீதியைப் பதிவு செய்திருந்தது.

**கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக வெளிநாட்டுப் படுகடன் மீள்செலுத்தல்கள், வெளிநாட்டு நிதியீட்டம் மற்றும் இறை மீதிகளின் வீழ்ச்சி என்பவற்றின் மீதான இடர்நேர்வுகளை மேற்கோள்காட்டி தரமிடல் முகவர்கள் இலங்கை நாட்டிற்கான கொடுகடன் தரமிடலை 2020இல் குறைத்திருந்தனர்.** 2020 ஏப்பிரல் மற்றும் மே மாதங்களில் பிட்ஜ் தரமிடல் மற்றும் எஸ்அன்ட்பீ குளோபல் தரமிடல் நிறுவனங்கள் இலங்கை நாட்டிற்கான தரமிடலை பீ- இற்குக் குறைத்திருந்ததுடன் தோற்றப்பாட்டை முறையே எதிர்க்கணியம் மற்றும் உறுதித்தன்மை என உறுதிப்படுத்தியிருந்தன. மூடிஸ் இன்வெஸ்டர்ஸ் சேர்விசஸ் நிறுவனமானது இலங்கைக்கான தரமிடலை 2020 ஏப்பிரல் மீளாய்வின் கீழ் பீ2 என நிர்ணயித்திருந்ததுடன், 2020 செத்தெம்பரில் நாட்டிற்கான தரமிடலை இரண்டு புள்ளிகளினால் சீஏஏ1 இற்குக் குறைத்ததுடன் தோற்றப்பாட்டை எதிர்க்கணியத்திலிருந்து உறுதியான தன்மைக்கு மாற்றியிருந்தது. 2020 நவம்பரில் பிட்ஜ் தரமிடல் நிறுவனமானது இலங்கைக்கான கடன்வழங்கல் தரமிடலை சீசீசீ இற்குக் குறைத்திருந்தது. 2020 திசெம்பரில் எஸ்அன்ட்பீ குளோபல் தரமிடல் நிறுவனமானது இலங்கைக்கான கடன்வழங்கல தரமிடலை உறுதியான தோற்றப்பாட்டிலிருந்து சீசீசீ+ இற்குக் குறைத்திருந்தது. தரமிடல் முகவர்கள் மோசமான ஊகத்தினைக் கொண்டிருந்த போதிலும் 2020 ஒக்டோபர் 6இல் முதிர்ச்சியடைந்த ஐக்கிய அமெரிக்க டொலர் 1 பில்லியன் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் உட்பட அனைத்து படுகடன் தீர்ப்பனவுக் கடப்பாடுகளையும் அரசாங்கம் 2020இல் மீள்செலுத்தியிருந்தது.


## 6.3 அரசாங்க வரவு செலவுத்திட்ட தொழிற்பாடுகள்

### அரசிறை மற்றும் கொடைகள்

#### அரசிறை

**கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக மெதுவடைந்த பொருளாதார செயலாற்றம், 2019இன் பிற்பகுதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட வரித் திருத்தங்கள் மற்றும் உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிநபர்களுக்கு வழங்கப்பட்ட வரிச் சலுகைகள் போன்றவற்றின் ஒருங்கிணைந்த தாக்கத்தை வெளிப்படுத்தி பெயரளவு மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதம் ஆகிய இரு நியதிகளிலும் அரசிறையானது 2020இல் வீழ்ச்சியடைந்திருந்தது.** அதற்கமைய, மொத்த அரசிறையானது 2019இன் ரூ. 1,890.9 பில்லியனிலிருந்து 2020இல் ரூ. 1,368.0 பில்லியனிற்கு 27.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்திருந்தது. மொத்த அரசிறையானது வருமான வரி, பெறுமதிசேர் வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி, செஸ் தீர்வை மற்றும் கலால் தீர்வைகள் என்பவற்றிலிருந்தான குறைந்தளவான அரசிறையின் முக்கிய காரணமாக 2019இன் ரூ.1,734.9 பில்லியனிலிருந்து 2020இல் ரூ.1,216.5 பில்லியனிற்கு 29.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது. உலகளாவிய நோய்த்தொற்றுக்கு மத்தியில் வியாபாரங்கள் மற்றும் தனிநபர்கள் ஆகியோரின் குறைவடைந்த வருமானத்தின் தாக்கத்தை முக்கியமாக பிரதிபலித்து நேரடி வரிகளிலிருந்தான அரசிறையின் சார்புப் பங்கானது முன்னைய ஆண்டின் 24.7 சதவீதத்திலிருந்து 2020இல் 22.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருந்தது. மறைமுக வரிகளிலிருந்தான அரசிறையின் பங்கானது 2020இல் மொத்த வரி அரசிறையில் 77.9 சதவீதத்திற்கு வகைகூறியிருந்தது. அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் இலாப மாற்றல்கள், கட்டணம் மற்றும் விதிப்புக்கள்

வரைபடம் 6.3
அரசிறையின் உள்ளமைப்பு - 2020




*மூலம்:* நிதி அமைச்சு

அட்டவணை 6.2
**அரசிறையின் சுருக்கம்**

| விடயம் | 2019 (அ) | 2020 (ஆ) |
|---|---|---|
| ரூபா. மில்லியன் | | |
| வரி அரசிறை | 1,734,925 | 1,216,542 |
| வருமான வரிகள் | 427,700 | 268,249 |
| பெறுமதி சேர் வரிகள் | 443,877 | 233,786 |
| கலால் வரிகள் | 399,478 | 321,932 |
| இறக்குமதி தீர்வைகள் | 98,427 | 114,183 |
| ஏனைய வரிகள் | 365,443 | 278,392 |
| வரியல்லா அரசிறை | 155,974 | 151,417 |
| மொத்த அரசிறை | 1,890,899 | 1,367,960 |
| மொ.உ.உ இன் சதவீதமாக (இ) | | |
| வரி அரசிறை | 11.6 | 8.1 |
| வருமான வரிகள் | 2.8 | 1.8 |
| பெறுமதி சேர் வரிகள் | 3.0 | 1.6 |
| கலால் வரிகள் | 2.7 | 2.2 |
| இறக்குமதி தீர்வைகள் | 0.7 | 0.8 |
| ஏனைய வரிகள் | 2.4 | 1.9 |
| வரியல்லா அரசிறை | 1.0 | 1.0 |
| மொத்த அரசிறை | 12.6 | 9.1 |

(அ) நிதியமைச்சின்படி, 2019இற்கான இறைத்துறை புள்ளிவிபரங்கள் 2020 இற்காக அறிவிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்ட உரையில் அறிவிக்கப்பட்டவாறு மீள்குறிப்பிடப்பட்டுள்ளது.
(அ) தற்காலிகமானது
(இ) 2019இற்கான தரவிற்கு 2021 மார்ச் 16ஆம் நாளான்று தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

*மூலம்:* நிதி அமைச்சு

என்பவற்றிலிருந்தான அரசிறைச் சேகரிப்பின் குறைப்பினைப் பிரதிபலித்து வரியல்லா அரசிறையானது ரூ.151.4 பில்லியனுக்கு 2.9 சதவீதத்தினால் சிறிதளவால் வீழ்ச்சியடைந்திருந்தது. வரி வருமானம் 2019இன் 11.6 சதவீதத்திலிருந்து 2020இல் 8.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமை மற்றும் வரியல்லா வருமானம் 2020இல் 1.0 சதவீதத்திற்கு எவ்விதமான மாற்றமும் இன்றி காணப்பட்டமை என்பவற்றைப் பிரதிபலித்து மொத்த அரசிறையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 2019இன் 12.6 சதவீதத்திலிருந்து 2020இல் 9.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருந்தது.

**அனைத்து வருமான வரிகளிலிருந்தான வருமானத்தின் வீழ்ச்சியைப் பிரதிபலித்து வருமான வரியிலிருந்தான அரசிறையானது பெயரளவு நியதிகள் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதம் ஆகிய இரு நியதிகளிலும் 2020இல் வீழ்ச்சியடைந்திருந்தது.** பெயரளவு நியதிகளில், வருமான வரியிலிருந்தான அரசிறையானது, 2019இன் ரூ.427.7 பில்லியனிலிருந்து 2020இல் ரூ.268.2 பில்லியனிற்கு 37.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்ததுடன் இது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 2019இன் 2.8 சதவீதத்திலிருந்து 2020இல் 1.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருந்தது. 2020 சனவரியிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் உழைக்கும் போதேசெலுத்தும் வரி மற்றும் பொருளாதார பணிக் கட்டணம் ஆகியன நீக்கப்பட்டமை அதற்கு மேலாக பிடித்து வைத்தல் வரி மற்றும் கம்பனி மற்றும் கம்பனியல்லா வருமான வரி என்பவற்றிற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் என்பவற்றின் முக்கியமாக காரணமாக வருமான வரியிலிருந்தான அரசிறையானது குறைவடைந்திருந்தது. 2019 நிதியியல் ஆண்டிற்காக சேகரிக்கப்பட்டு 2020இல் அனுப்பப்பட்ட உழைக்கும் போதே செலுத்தும் வரியிலிருந்தான அரசிறை மற்றும் அதற்கு மேலாக 2020 ஏப்பிரல் 01ஆம் திகதியிலிருந்து உழைக்கும் போதே செலுத்தும் வருமான வரிக்கு மாற்றீடாக அறிமுகப்படுத்தப்பட்ட உயர்ந்த தனியாள் வருமான வரியின் பேரிலான அரசிறையானது 2019இன் உழைக்கும் போதே செலுத்தும் வருமான வரியிலிருந்தான ரூ.49.4 பில்லியன் அரசிறையுடன் ஒப்பிடுமிடத்து 2020இல் ரூ.15.0 பில்லியனைப் பதிவுசெய்திருந்தது. 2019ஆம் ஆண்டிற்கான சேகரிக்கப்பட்ட நிலுவைத்தொகையின் காரணமாக பொருளாதார பணிக் கட்டணத்திலிருந்தான அரசிறை 2019இன் ரூ.55.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020இல் ரூ.15.0 பில்லியனாக பதிவுசெய்யப்பட்டிருந்தது. பிடித்துவைத்தல் வரிக்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் காரணமாக பிடித்துவைத்தல் வரியிலிருந்தான அரசிறைச் சேகரிப்பானது 2019இன் ரூ.50.4 பில்லியனிலிருந்து 2020இல் ரூ.10.0 பில்லியனிற்கு வீழ்ச்சியடைந்திருந்தது. கம்பனி மற்றும் கம்பனியல்லா வருமான வரியிலிருந்தான அரசிறைச் சேகரிப்புக்கள் 2019இன் ரூ.272.6 பில்லியனிலிருந்து 2020இல் ரூ.228.3 பில்லியனிற்கு 16.2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்ததுடன் இது முக்கியமாக 2020 சனவரி 01இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் தனியாள் வருமான வரி வீதங்கள் மற்றும் கம்பனி வருமான வரி வீதங்களில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களை முக்கியமாக பிரதிபலித்திருந்தது.

**பொருளாதார நடவடிக்கைகளின் மெதுவடைதலின் மத்தியில் 2019 திசெம்பர் 01இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் பெறுமதி சேர் வரி வீதம் 15 சதவீதத்திலிருந்து 8 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டமையின் காரணமாக பெறுமதி சேர் வரி மற்றும் கலால் தீர்வை என்பவற்றிலிருந்தான அரசிறையானது வீழ்ச்சியடைந்திருந்தது.** மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக பெறுமதிசேர் வரியிலிருந்தான அரசிறையானது 2019இன் 3.0 சதவீதத்திலிருந்து 2020இல் 1.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருந்த அதேவேளை பெயரளவு நியதிகளில் பெறுமதிசேர் வரியின் அரசிறை, குறிப்பாக 2019இன் ரூ.443.9 பில்லியனிலிருந்து 2020இன் ரூ.233.8 பில்லியனிற்கு 47.3 சதவீதத்திற்கு கணிசமானளவில் வீழ்ச்சியடைந்திருந்தது. இறக்குமதி மீதான பெறுமதி சேர் வரியிலிருந்தான அரசிறை, 2019இன் ரூ.169.9 பில்லியனிலிருந்து 2020இல் ரூ.85.7 பில்லியனிற்கு 49.5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த அதேவேளை உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளின் மீதான பெறுமதி சேர் வரியிலிருந்தான அரசிறை, 2019இன் ரூ.274.0 பில்லியனிலிருந்து 2020இல் ரூ.148.1 பில்லியனிற்கு 46.0

6

சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. உந்து ஊர்திகள் மற்றும் பெற்றோலிய உற்பத்திகள் மீதான கலால் வரியிலிருந்தான குறைந்த வருமான சேகரிப்பின் முக்கிய காரணமாக கலால் வரியிலிருந்தான அரசிறை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 2019இன் 2.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2020இல் 2.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருந்தது. 2020ஆம் ஆண்டுப்பகுதியில் அத்தியாவசியமற்ற இறக்குமதிகளை குறைப்பதற்கு விதிக்கப்பட்ட வரையறைகளின் மத்தியில் உந்து ஊர்திகளின் இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக உந்து ஊர்திகள் மீதான கலால் வரியிலிருந்தான அரசிறைசேகரிப்பு 2019இன் ரூ.130.4 பில்லியனிலிருந்து 2020இல் ரூ.48.8 பில்லியனிற்கு வீழ்ச்சியடைந்திருந்தது. பெற்றோலிய உற்பத்திகள் மீதான கலால் வரியிலிருந்தான வருமானம் 2019இன் ரூ.61.7 பில்லியனிலிருந்து 2020இல் ரூ.53.1 பில்லியனிற்கு வீழ்ச்சியடைந்திருந்ததுடன் இது பெற்றோலிய உற்பத்திகள் சார்பளவில் குறைந்தளவில் இறக்குமதி செய்யப்பட்டமையை பிரதிபலித்திருந்தது. இருப்பினும், சிகரெட், புகையிலை மற்றும் குடிவகை மீதான கலால் வரியிலிருந்தான வருமானம், ஆண்டு காலப்பகுதியில் அதிகரித்திருந்ததுடன் 2019 திசெம்பரில் சிகரெட், புகையிலை மற்றும் குடிவகை மீது மேற்கொள்ளப்பட்ட கலால் வரியின் மேல் நோக்கிய திருத்தங்களை பிரதிபலித்திருந்தது. அதற்கமைய, சிகரெட், புகையிலை மற்றும் குடிவகை மீதான கலால் வரியிலிருந்தான அரசிறையானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020இல் முறையே, ரூ.94.3 பில்லியன் மற்றும் ரூ.121.0 பில்லியனிற்கு 8.0 சதவீதம் மற்றும் 4.8 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அதேவேளை, 2019 திசெம்பரில் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியின் நீக்கத்தைத் தொடர்ந்து தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மீதான நிலுவை சேகரிப்பானது 2020இல் ரூ.2.4 பில்லியன் பெறுமதியாகவிருந்தது.

**2020ஆம் ஆண்டு காலப்பகுதியில் இறக்குமதிச் சுருக்கமடைந்த போதிலும் வரித் திருத்தங்களின் தாக்கத்தினைப் பிரதிபலித்து பன்னாட்டு வர்த்தகத்துடன் தொடர்புடைய வரிகளிலிருந்தான அரசிறை 2020இல் முன்னேற்றமொன்றை காட்டியிருந்தது.** 2020 மார்ச் மற்றும் ஏப்பிரல் மாதங்களில் பெற்றோலிய உற்பத்திகள் மீதான தீர்வைத் தளர்த்தல்கள் அகற்றப்பட்டமை மற்றும் 2020 ஏப்பிரல் தொடக்கம் பெற்றோலிய உற்பத்திகள் மீதான சுங்கத் தீர்வை அதிகரிக்கப்பட்டமையின் பகுதியளவு காரணமாக இறக்குமதித் தீர்வைகளிலிருந்தான அரசிறை சேகரிப்புக்கள் 2019இன் ரூ.98.4 பில்லியனிலிருந்து 2020இல் ரூ. 114.2 பில்லியனிற்கு அதிகரித்திருந்தது. சிறப்புப் பண்டத் தீர்வை வீதங்களின் மேல் நோக்கிய திருத்தங்கள் காரணமாக சிறப்புப் பண்டத் தீர்வையிலிருந்தான அரசிறை திரட்டலானது 2020இல் ரூ. 82.7 பில்லியனிற்கு 17.5 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. பல்வேறுபட்ட பொருட்கள் மீது வரி விலக்கல்கள் வழங்கப்பட்டமை மற்றும் அத்தியாவசியமற்ற உற்பத்திகளின் மீதான இறக்குமதி கட்டுப்பாடுகளைத் தொடர்ந்து இறக்குமதிகளில் ஏற்பட்ட சுருக்கத்திற்கு மத்தியில் துறைமுகங்கள் மற்றும் வானூர்திநிலைய அபிவிருத்தித் தீர்வையின் நியம வீதமானது 7.5 சதவீதத்திலிருந்து 10.0 சதவீதத்திற்கு மேற்கொண்ட அதிகரிப்பினைப் பிரதிபலித்து துறைமுகங்கள் மற்றும் வானூர்தி நிலைய அபிவிருத்தித் தீர்வையிலிருந்தான அரசிறையானது 2019இன் ரூ. 112.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020இல் ரூ. 115.4 பில்லியனிற்கு அதிகரித்திருந்தது.

**ஆண்டு காலப்பகுதியில் பெயரளவு நியதிகளில் வரியல்லா அரசிறையானது வீழ்ச்சியடைந்திருந்த அதேவேளை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.0 சதவீதத்தில் மாற்றமின்றி காணப்பட்டது.** பெயரளவு நியதிகளில், வரியல்லா அரசிறையானது 2019இன் ரூ.156.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020இல் ரூ.151.4 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்திருந்தது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக்கு மத்தியில் கட்டணங்கள் மற்றும் விதிப்புக்களிலிருந்தான அரசிறை மற்றும் அரசிற்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகளிலிருந்தான இலாபங்கள் மற்றும் பங்கிலாப மாற்றல்களில் ஏற்பட்ட வீழ்ச்சி 2020 காலப்பகுதியில் பெயரளவு நியதிகளில் வரியல்லா அரசிறை வீழ்ச்சியடைந்தமைக்கு பிரதானமாகப் பங்களித்திருந்தன. அதன்படி, கட்டணங்கள் மற்றும் விதிப்புக்கள் 2019இன் ரூ.73.9 பில்லியனிலிருந்து 2020இல் ரூ.47.4 பில்லியனுக்கு 35.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த அதேவேளை இலாபம் மற்றும் பங்கிலாப மாற்றல்கள் 2019இன் ரூ.27.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020இல் ரூ.17.6 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்திருந்தது. எனினும், சமூக பாதுகாப்பு பங்களிப்புக்களிலிருந்தான அரசிறை 2019இன் ரூ.29.0 பில்லியனிலிருந்து 2020இல் ரூ.32.4 பில்லியனுக்கு அதிகரித்திருந்த அதேவேளை வாடகை மற்றும் வட்டி வருமானமானது 2019இன் ரூ.18.5 பில்லியனிலிருந்து 2020இல் ஆண்டில் ரூ.19.4 பில்லியனுக்கு 4.3 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. இலங்கை மத்திய வங்கியானது 2019இன் எவ்விதமான இலாபப் பரிமாற்றலின்மைக்கு எதிராக 2020இல் ரூ.24.0 பில்லியன் பெறுமதியான பகிர்ந்தளிக்கக்கூடிய இலாபத்தை பரிமாற்றியிருந்தது.

## கொடைகள்

**இருபக்க மற்றும் பல்பக்க மூலங்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டுக் கொடைகள் 2019இன் ரூ.7.9 பில்லியனிலிருந்து 2020இல் ரூ.5.3 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்திருந்தது.** இருபக்க மூலங்களிலிருந்தான வெளிநாட்டுக் கொடைகள் 2019இன் ரூ.5.1 பில்லியனிலிருந்து 2020இல் ரூ.2.8 பில்லியனிற்கு வீழ்ச்சியடைந்த அதேவேளை பல்பக்க மூலங்களிலிருந்தான வெளிநாட்டுக் கொடைகள்

2019இன் ரூ.2.8 பில்லியனிலிருந்து 2020இல் ரூ.2.5 பில்லியனிற்கு வீழ்ச்சியடைந்திருந்தது. 2020 காலப்பகுதியில் கொடைகளை வழங்கிய அபிவிருத்திப் பங்காளிகளானது ஜப்பான் அரசாங்கம், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் வேளாண்மைத் திணைக்களம் போன்றவற்றை உள்ளடக்கியிருந்தது.

## செலவினமும் தேறிய கடன்வழங்கலும்

**2019ஆம் ஆண்டிலிருந்து கசிவுச் செய்யப்பட்ட நிலுவையிலுள்ள கொடுப்பனவுகளை செலுத்துவதனைக் கருத்திற்கொண்டு நிதி அமைச்சானது ரூ. 422.6 பில்லியன் தொகையினை 2019 இற்கு நகர்த்துவதன் ஊடாக 2020ஆம் ஆண்டிற்கான அரசச் செலவினங்கள் மற்றும் தேறிய கடன்வழங்களினை சீராக்கியிருந்தது.** அதன்படி, 2020ஆம் ஆண்டில் ஏற்பட்ட மீண்டெழும் செலவினங்களில் ரூ. 123.4 பில்லியன் தொகையானது 2019இற்கு நகர்த்தப்பட்டுள்ளதுடன் 2020இன் மூலதனம் மற்றும் தேறிய கடன்வழங்களிலிருந்து ரூ.299.2 பில்லியன் தொகையானது 2019இற்கு நகர்த்தப்பட்டுள்ளது. இத்தகைய சீராக்கங்களுடன், அரச செலவினங்கள் மற்றும் தேறிய கடன்வழங்களானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 2019இன் 22.2 சதவீதத்திலிருந்து (ரூ.3,337.9 பில்லியன்) 2020இல் 20.3 சதவீதத்திற்கு (ரூ.3,041.0 பில்லியன்) வீழ்ச்சியடைந்திருந்தது. மூலதன செலவினம் மற்றும் தேறிய கடன்வழங்களானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2019இன் 6.1 சதவீதத்திலிருந்து (ரூ.913.3 பில்லியன்) 2020இல் 3.3 சதவீதத்திற்கு (ரூ.492.6 பில்லியன்) ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியினாது அரச செலவினம் மற்றும் தேறிய கடன்வழங்களின் வீழ்ச்சிக்கு பங்களித்திருந்தது. மாறாக, மீண்டெழும் செலவினமானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2019இன் 16.1 சதவீதத்துடன் (ரூ.2,424.6 பில்லியன்) ஒப்பிடுகையில் 2020இல் 17.0 சதவீதத்திற்கு (ரூ.2,548.4 பில்லியன்) அதிகரித்திருந்தது.

6

**மானியங்கள், மாற்றல்கள், சம்பளங்கள் மற்றும் கூலிகள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் என்பவற்றின் செலவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் முக்கிய காரணமாக 2020இல் மீண்டெழும் செலவினங்கள் அதிகரித்திருந்தது.** பிரதானமாக வீட்டுத்துறைக்கான நடைமுறை மாற்றல்களின் அதிகரிப்பின் காரணமாக பெயரளவு நியதிகள் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதம் ஆகிய இரண்டிலும் நடைமுறை மாற்றல்கள் மற்றும் மானியங்களின் செலவினமானது ஆண்டுகாலப்பகுதியில் அதிகரித்திருந்தது. ஓய்வூதியக் கொடுப்பனவுகள், சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூகத்தின் வறிய பிரிவினருக்கான நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் அதேபோன்று பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கான காசுக் கொடுப்பனவு காரணமாக ஏற்பட்ட மேலதிக செலவினங்கள் மற்றும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக்கு மத்தியில் சுகாதாரப் பராமரிப்பு மற்றும் பிற நோக்கங்களுடன் தொடர்புடைய உறப்பட்ட செலவினங்கள் காரணமாக வீட்டுத்துறைக்கான மாற்றல்கள் மற்றும் மானியங்கள் என்பன அதிகரித்திருந்தன. அரச ஊழியர்களுக்கான வருடாந்த சம்பள மட்ட அதிகரிப்பு மற்றும் 2020 காலப்பகுதியில் புதிதாக ஆட்சேர்க்கப்பட்டவர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள், 2019 ஜுலை 01ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் அரசதுறை ஊழியர்களுக்கான மாதாந்த ரூ. 2,500 இடைக்காலப்

அட்டவணை 6.3
அரச செலவினத்தின் சுருக்கம்


| விடயம் | 2019 (அ) | 2020 (ஆ) |
|---|---|---|
| ரூபா. மில்லியன் | | |
| **மீண்டெழும் செலவீனம்** | **2,424,582** | **2,548,359** |
| பொருட்கள் மற்றும் பணிகள் மீதான செலவினம் | 848,278 | 974,351 |
| இதில் சம்பளங்கள் மற்றும் கூலிகள் | 686,452 | 794,158 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 901,353 | 980,302 |
| வெளிநாடு | 233,970 | 266,679 |
| உள்நாடு | 667,383 | 713,623 |
| நடைமுறை மாற்றல்களும் மானியங்களும் | 551,524 | 717,133 |
| இதில் வீட்டுத்துறை மற்றும் ஏனைய துறைக்கானது | 456,241 | 610,486 |
| சமூர்த்தி | 44,660 | 52,434 |
| ஓய்வூதியம் | 227,670 | 257,833 |
| வளமாக்கி மானியம் | 34,966 | 36,687 |
| ஏனையவை | 148,945 | 263,532 |
| நிதி அமைச்சிற்கு ஏற்றவாறான முற்கொடுப்பனவுக்கான சீராக்கங்கள் | 123,428 | -123,428 |
| **மூலதனச் செலவினம்** | **619,069** | **795,368** |
| உண்மைச் சொத்துக்களின் கையேற்பு | 385,366 | 483,543 |
| மூலதன மாற்றல்கள் | 239,688 | 307,917 |
| ஏனையவை | -5,985 | 3,907 |
| **தேறிய கடன் வழங்கல்** | **-4,933** | **-3,552** |
| நிதி அமைச்சிற்கு ஏற்றவாறான முற்கொடுப்பனவுக்கான சீராக்கங்கள் | 299,178 | -299,178 |
| மூலதன செலவினமும் தேறிய கடன்வழங்கலும் | **913,314** | **492,638** |
| **மொத்த செலவினமும் தேறிய கடன் வழங்கலும்** | **3,337,896** | **3,040,996** |
| மொ.உ.உ இன் சதவீதமாக (ஆ) | | |
| **மீண்டெழும் செலவீனம்** | 16.1 | 17.0 |
| பொருட்கள் மற்றும் பணிகள் மீதான செலவினம் | 5.7 | 6.5 |
| இதில் சம்பளங்கள் மற்றும் கூலிகள் | 4.6 | 5.3 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 6.0 | 6.5 |
| வெளிநாடு | 1.6 | 1.8 |
| உள்நாடு | 4.4 | 4.8 |
| நடைமுறை மாற்றல்களும் மானியங்களும் | 3.7 | 4.8 |
| இதில் வீட்டுத்துறைகளும் ஏனைய துறைகளும் | 3.0 | 4.1 |
| சமூர்த்தி | 0.3 | 0.4 |
| ஓய்வூதியம் | 1.5 | 1.7 |
| வளமாக்கி மானியம் | 0.2 | 0.2 |
| ஏனையவை | 1.0 | 1.8 |
| நிதி அமைச்சிற்கு ஏற்றவாறான முற்கொடுப்பனவுக்கான சீராக்கங்கள் | 0.8 | -0.8 |
| **மூலதனச் செலவினம்** | 4.1 | 5.3 |
| உண்மைச் சொத்துக்களின் கையேற்பு | 2.6 | 3.2 |
| மூலதன மாற்றல்கள் | 1.6 | 2.1 |
| ஏனையவை | -0.04 | 0.03 |
| தேறிய கடன்வழங்கல் | -0.03 | -0.02 |
| நிதி அமைச்சிற்கு ஏற்றவாறான முற்கொடுப்பனவுக்கான சீராக்கங்கள் | 2.0 | -2.0 |
| **மூலதன செலவினமும் தேறிய கடன் வழங்கலும்** | 6.1 | 3.3 |
| **மொத்த செலவினமும் தேறிய கடன் வழங்கலும்** | 22.2 | 20.3 |

(அ) நிதியமைச்சின்படி 2019இற்கான இறைத்துறை புள்ளிவிபரஙகள் 2020 இற்காக அறிவிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்ட உரையில் அறிவிக்கப்பட்டவாறு மீள்குறிப்பிடப்பட்டுள்ளது.
(அ) தற்காலிகமானது
(இ) 2019இற்கான தரவானது 2021 மார்ச் 16ஆம் நாளான்று தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளை பயன்படுத்தியுள்ளது.

*மூலம்:* நிதி அமைச்சு

வரைபடம் 6.4

**அரச மீண்டெழும் செலவினத்தின் உள்ளமைப்பு - 2020 (அ)**




(அ) சார்புப் பங்கானது 2020இலிருந்து 2019இற்கு நகர்த்தப்பட்ட மீண்டெழும் செலவினத்தின் நிலுவைக் கொடுப்பனவுகளுக்கான சீராக்கங்கள் நீங்கலாக கணிப்பிடப்பட்டுள்ளது.

*மூலம்:* நிதி அமைச்சு

படியொன்றினை வழங்கும் படியான 2016 சனவரி தொடக்கம் புதிய சம்பளக் கட்டமைப்பொன்றின் அமுலாக்கத்துடன் அடிப்படை சம்பளத்துக்கான முன்னேற்றமானதோா் அடிப்படையிலமைந்த இடைக்கால படி வழங்களின் தாக்கம் என்பவற்றைப் பிரதிபலித்து முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020இல் சம்பளங்கள் மற்றும் கூலிகளின் செலவினங்கள் அதிகரித்திருந்தன. மீண்டெழும் செலவினங்களின் பெரும் பங்கினை உள்ளடக்கியிருந்த வட்டிக் கொடுப்பனவுகளுக்கான செலவினங்கள் 2020இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதம் மற்றும் பெயரளவு நியதிகள் ஆகிய இரண்டிலும் அதிகரித்திருந்தன. இவ்வதிகரிப்பானது உள்நாட்டு வட்டிக் கொடுப்பனவுகளிலும் வெளிநாட்டு வட்டி கொடுப்பனவுகளிலும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அரச பிணையங்கள் மற்றும் ஏனைய உள்நாட்டு வட்டி வீதங்கள் என்பவற்றின் கணிசமான வீழ்ச்சியின் தாக்கத்தை எதிரீடு செய்திருந்த அதிகரித்த தேறிய உள்நாட்டு நிதியிடலில் முக்கிய காரணமாக மொத்த வட்டிக் கொடுப்பனவுகளில் 72.8 சதவீதத்தினை உள்ளடக்கியிருந்த வெளிநின்ற உள்நாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 2019இன் ரூ.667.4 பில்லியனிலிருந்து 2020இல் ரூ.713.6 பில்லியனிற்கு அதிகரித்திருந்தது. வெளிநாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் பிரதானமாக வெளிநின்ற வா்த்தகப் படுகடன் மீதான அதிகரித்த வட்டிக் கொடுப்பனவுகளின் தாக்கத்தைப் பிரதிபலித்து 2019இன் ரூ.234.0 பில்லியனிலிருந்து 2020இல் ரூ.266.7 பில்லியனிற்கு 14.0 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. 2020இல் வட்டிக் கொடுப்பனவுகள் மொத்த மீண்டெழும் செலவினத்தில் 38.5 சதவீதத்திற்கு வகைகூறியிருந்ததுடன் மொத்த அரசிறையின் 71.7 சதவீதத்திற்கு சமனாக காணப்பட்டது.

**மூலதன செலவினம் மற்றும் தேறிய கடன்வழங்கல் என்பன 2019இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 6.1 சதவீதத்திலிருந்து 2020இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 3.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருந்தது.** இவ்வீழ்ச்சியானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.0 சதவீதத்தினை உள்ளடக்கிய மூலதன செலவீனங்களின் நிலுவையிலுள்ள கொடுப்பனவுகளின் சீராக்கல்களுடன் கூடிய அரசிறை மற்றும் மீண்டெழும் செலவினங்கள் என்பவற்றில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியின் காரணமாக ஏற்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட இறை இடைவெளியின் தாக்கத்தைப் பிரதிபலித்திருந்தது.

## முக்கிய இறை மீதிகளும் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறைக்கான நிதியீட்டமும்

**நோய்த்தொற்றின் மத்தியில் பொருளாதார நடவடிக்கைகளின் சுருக்கத்துடன், அரசிறையின் வீழ்ச்சி மற்றும் மீண்டெழும் செலவினத்தின் அதிகரிப்பு என்பவற்றை பிரதிபலித்து முக்கிய இறை மீதிகள் 2020இல் மோசமடைந்திருந்தன.** நிதி அமைச்சின் இறைத்துறையின் புள்ளிவிபரங்களின் படி, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக திரண்ட வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையானது, 2019இன் 9.6 சதவீதத்திலிருந்து (ரூ. 1,439.1 பில்லியன்) 2020இல் (ரூ. 1,667.7 பில்லியன்) 11.1 சதவீதத்திற்கு அதிகரித்திருந்தது. அரசின் குறைச் சேமிப்புக்களைப் பிரதிபலிக்கின்ற நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2019இல் காணப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 3.6 சதவீதத்திலிருந்து (ரூ.533.7 பில்லியன்) 2020இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 7.9 சதவீதத்திற்கு அதிகரித்திருந்தது. அதேநேரம், திரண்ட வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையிலிருந்து வட்டிக் கொடுப்பனவுகளை நீக்கிய மற்றும் இறைக் கொள்கையின் விருப்பமான கூறுகளை பிரதிபலிக்கும் ஆரம்பப் பற்றாக்குறையானது 2019இல் காணப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 3.6 சதவீதத்துடன் (ரூ.537.7 பில்லியன்) ஒப்பிடுகையில் (ரூ. 1,180.4 பில்லியன்) 2020இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4.6 சதவீதத்திற்கு (ரூ. 687.4 பில்லியன்) அதிகரித்திருந்தது. 2020இல் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை நிதியீட்டம் செய்வதற்கு அரசாங்கமானது உள்நாட்டு மூலங்களில் தங்கியிருந்த அதேவேளை மிகவும் சவாலான உலகளாவிய சந்தை நிலைமைகளின் தாக்கத்தின் காரணமாக அரசாங்கத்தினால் வெளிநாட்டு நிதியிடலை அணுகுவதற்கு ஏற்பட்டிருந்த தடை மற்றும் வெளிநாட்டு படுகடன் சுமை தொடர்பில் வெளிநாட்டு நிதியீட்டம் மீது தங்கியிருத்தலை குறைப்பதற்கான அரசாங்கத்தின் வெளிப்படுத்தப்பட்ட விருப்பத்தேர்வு என்பவற்றை வெளிப்படுத்தியிருந்தது. நிதி அமைச்சின் படி, 2019இன் தேறிய வெளிநாட்டு நிதியிடல் ரூ. 542.6 பில்லியனுடன் (மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 3.6 சதவீதம்) ஒப்பிடுகையில் 2020இல் தேறிய மீள்கொடுப்பனவானது ரூ. 83.2 பில்லியனாக (மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 0.6 சதவீதம்) தேறிய வெளிநாட்டு நிதியிடலில் பதிவு செய்யப்பட்டிருந்த அதேவேளை, தேறிய உள்நாட்டு நிதியிடலானது 2019இன் ரூ. 896.4 பில்லியனுடன் (மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 6.0 சதவீதம்) ஒப்பிடுகையில் 2020இல் ரூ. 1,750.9 பில்லியனாக (மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 11.7 சதவீதம்) காணப்பட்டது.

6


## 6.4 அரச படுகடன் மற்றும் படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

### மத்திய அரச படுகடன்

**2020இன் இறுதியில் உள்நாட்டு படுகடனால் தூண்டப்பட்டு பெயரளவு நியதிகள் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதம் ஆகிய இரு நியதிகளிலும் மத்திய அரச படுகடனானது அதிகரித்திருந்த அதேவேளை வெளிநின்ற வெளிநாட்டு படுகடன் 2019இனைக் காட்டிலும் 2020இல் கணிசமானளவான வீழ்ச்சியொன்றைப் பதிவு செய்திருந்தது.** அரசிறையில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் அரசாங்கத்தின் மீண்டெழும் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பவற்றிற்கு மத்தியில் 2020இல் அரசாங்கத்தின் தேறிய உள்நாட்டு நிதியீட்டத்தின் கணிசமான அதிகரிப்பானது 2020இன் இறுதியில் வெளிநின்ற மத்திய அரச படுகடனின் அதிகரிப்பிற்கு பங்களித்திருந்தது. வெளிநாட்டு நிதியிடலினைக் காட்டிலும் உள்நாட்டு நிதியிடலை அரசாங்கம் விரும்பியிருந்ததுடன் 2020இன் இறுதியில் வெளிநின்ற வெளிநாட்டு படுகடனை குறைப்பதற்கு உதவியாக அமைந்த நோய்த்தொற்றின் மத்தியில் தோன்றிய அதிகரித்த விளைவு வீதங்களின் காரணமாக இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை கொண்டிருப்பதற்கான நிதி நிறுவனங்களின் விருப்பம் அதிகரித்திருந்த அதேவேளை, 2020ஆம் ஆண்டில் நிலவிய சாதகமற்ற சந்தை நிலைமைகளின் காரணமாக அரசாங்கத்தால் வெளிநாட்டு நிதியுதவிக்கான தடைசெய்யப்பட்ட அணுகலானது வெளிநாட்டு படுகடனை தேறிய மீள்கொடுப்பனவு செய்வதற்கு காரணமாக அமைந்திருந்தது. வெளிநின்ற மத்திய அரச படுகடன் 2019இன் இறுதியின் ரூ.13,031.5 பில்லியனிலிருந்து 2020இன் இறுதியில் ரூ.15,117.2 பில்லியனிற்கு அதிகரித்திருந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக வெளிநின்ற மத்திய அரச படுகடன் 2019 இறுதியின் 86.8 சதவீதத்துடன்[6] ஒப்பிடுகையில் 2020 இறுதியில் 101.0 சதவீதத்திற்கு அதிகரித்திருந்தது. 2020இல் பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட சுருக்கமும் 2020இன் இறுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான மத்திய அரச படுகடனின் விகிதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு பங்களித்திருந்தது. வெளிநின்ற மத்திய அரச படுகடனின் பெயரளவு அதிகரிப்பில் நாணயமாற்று வீத தேய்மானத்தின் விளைவாக ஏற்பட்ட சமநிலை வேறுபாடுகள் ரூபாய் பெறுமதியிலான வெளிநாட்டு படுகடனை 2020 இறுதியில் ரூ.355.7 பில்லியனால் அதிகரித்திருந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமான அரச உள்நாட்டு படுகடன் 2019 இறுதியின் 45.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2020இன்

6 2019 இறுதியின் மத்திய அரசாங்க படுகடன் புள்ளிவிபரங்கள் நிதி அமைச்சின்படி அரச செலவினத்தின் கொடுப்பனவு நிலுவைகளிற்கு சீராக்கங்களை மேற்கொள்ள வேண்டியதுடன் 2019இன் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறைக்கான தேறிய நிதியீட்டத்துடன் சேர்த்துக் கொள்ளப்படலும் வேண்டும். எனினும், அத்தகைய சீராக்கங்கள் 2020இன் இறுதியில் வெளிநின்ற மத்திய அரசாங்க படுகடனில் எவ்விதமான தாக்கத்தையும் ஏற்படுத்த மாட்டாது.

வரைபடம் 6.5
மத்திய அரசின் வெளிநின்ற படுகடன்




இறுதியில் 60.6 சதவீதத்திற்கு அதிகரித்திருந்ததுடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மத்திய அரச வெளிநாட்டு படுகடன் 2019 இறுதியின் 41.3 சதவீதத்திலிருந்து 2020இல் 40.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருந்தது. மத்திய அரசின் வெளிநாட்டு படுகடனின் சதவீத பங்கானது 2019 இறுதியின் 47.6 சதவீதத்திலிருந்து 2020 இறுதியில் 40.0 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்கதொரு வீழ்ச்சியைப் பதிவு செய்திருந்த அதேவேளை வெளிநின்ற மத்திய அரச படுகடனின் சாா்பு ரிதியான பங்கானது 2019 இறுதியின் 52.4 சதவீதத்திலிருந்து 2020 இறுதியில் மொத்த படுகடனின் 60.0 சதவீதத்திற்கு அதிகரித்திருந்தது. வெளிநின்ற மத்திய அரச படுகடனில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்பட்டபோதிலும், நடுத்தர கால படுகடன் முகாமைத்துவ தந்திரோபாயத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட அடிப்படை அளவுகளிற்கு எதிரான மேம்படுத்தலொன்றை குறிப்பிட்ட சில படுகடன் முகாமைத்துவ குறிகாட்டிகள் காட்டியிருந்தன. அதற்கிணங்க, 2020இன் இறுதியில் மொத்த வெளிநின்ற படுகடனின் சதவீதமாக வெளிநின்ற மத்திய அரச வெளிநாட்டு நாணய படுகடனின் அளவானது 2018 இறுதியின் 54.0 சதவீதத்தின் அடிப்படை அளவுடன் ஒப்பிடுகையில் 47.5 சதவீதத்திற்கு குறைவடைந்திருந்ததுடன் வெளிநாட்டு நாணயப் படுகடனின் சொத்துப்பட்டியல் முதிர்ச்சிக்கான சராசரி நேரமானது 2018 இறுதியின் 6.60 ஆண்டுகளின் அடிப்படை அளவுகளுடன் ஒப்பிடுகையில் 6.72 ஆண்டுகளுக்கு விரிவாக்கப்பட்டிருந்தது.

**மத்திய அரசின் வெளிநின்ற உள்நாட்டு படுகடன் முக்கியமாக உள்நாட்டு நிதியிடலின் அதிகரித்த தாக்கத்தை பிரதிபலித்து 2019இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 45.5 சதவீதத்திலிருந்து 2020இன் இறுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 60.6 சதவீதத்திற்கு அதிகரித்திருந்தது.** பெயரளவு நியதிகளில், உள்நாட்டு படுகடனானது 2019 இறுதியின் ரூ.6,830.3 பில்லியனிலிருந்து 2020 இறுதியில் ரூ.9,065.1 பில்லியனிற்கு 32.7 சதவீதத்தால் கணிசமானளவில் அதிகரித்திருந்தது.

அட்டவணை 6.4
மத்திய அரசின் வெளிநின்ற படுகடன் (ஆண்டு முடிவில் உள்ளவாறு)

ரூ. மில்லியன்

| விடயம் | 2017 | 2018 | 2019 (அ) | 2020 (அ) (ஆ) |
|---|---|---|---|---|
| **மொத்த அரச படுகடன்** | **10,382,832** | **12,030,548** | **13,031,543** | **15,117,247** |
| **உள்நாட்டு படுகடன் (இ)** | **5,664,215** | **6,071,001** | **6,830,260** | **9,065,068** |
| முதிர்வு காலத்தின்படி | | | | |
| குறுங்காலம் | 1,031,181 | 1,134,553 | 1,270,374 | 2,197,594 |
| நடுத்தர மற்றும் நீண்டகால | 4,633,033 | 4,936,447 | 5,559,887 | 6,867,473 |
| நிறுவனங்களின்படி | | | | |
| வங்கி | 2,361,254 | 2,321,802 | 2,888,451 | 4,735,738 |
| வங்கியல்லா | 3,302,961 | 3,749,199 | 3,941,809 | 4,329,330 |
| **வெளிநாட்டு படுகடன்** | **4,718,618** | **5,959,547** | **6,201,283** | **6,052,179** |
| வகைகளின் படி | | | | |
| சலுகைக் கடன்கள் | 2,130,482 | 2,705,836 | 2,767,459 | 2,988,113 |
| சலுகையல்லா கடன்கள் | 2,588,135 | 3,253,711 | 3,433,824 | 3,064,066 |
| பல்பக்க | 243,581 | 58,586 | 112,943 | 156,252 |
| இருபக்க | 316,626 | 209,970 | 198,733 | 184,051 |
| வர்த்தக (இ) | 2,027,928 | 2,985,156 | 3,122,148 | 2,723,763 |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | 1,475,049 | 2,220,411 | 2,343,777 | 1,796,579 |
| வெளிநாட்டு நாணய தவணை நிதியிடல் வசதி | 217,054 | 330,174 | 242,191 | 279,612 |
| திறைச்சேரி உண்டியல்கள் மீதான வதியாதோர் முதலீடுகள் | 27,552 | 11,909 | 23,727 | 670 |
| திறைச்சேரி முறிகள் மீதான வதியாதோர் முதலீடுகள் | 295,059 | 146,914 | 80,294 | 6,204 |
| ஏனையவை | 13,215 | 275,747 | 432,159 | 640,698 |
| நாணயங்களின்படி | | | | |
| சி.எ.உ. | 829,537 | 954,761 | 927,372 | 970,714 |
| ஐ.அ.டொலர் | 2,650,431 | 3,781,626 | 4,076,588 | 3,875,950 |
| யப்பானிய யென் | 516,218 | 622,852 | 624,956 | 664,291 |
| யூரோ | 208,075 | 225,831 | 228,713 | 251,406 |
| ஏனையவை | 514,356 | 374,477 | 343,653 | 289,818 |
| **குறிப்பு : மத்திய அரசாங்கம் படுகடன் / மொ.உ.உ. (ஈ)** | 77.9 | 84.2 | 86.8 | 101.0 |
| **ஞாபகார்த்த விடயங்கள்** | | | | |
| மொத்த நாணயமாற்று வீத வேறுபாடுகள் மீதான | 225,223 | 1,063,218 | 12,401 | 355,663 |
| வெளிநாட்டுப் படுகடன் மீதான | 211,868 | 963,181 | 16,857 | 329,895 |
| வெளிநாட்டு நாணயவடிவில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டுப்படுகடன் மீதான | 13,355 | 100,037 | -4,456 | 25,767 |

(அ) 2014 சர்வதேச நாணய நிதியத்தால் அரச நிதி புள்ளிவிபரங்களுக்கான கையேட்டில் அரசாங்கம் படுகடன் புள்ளிவிபரங்களை தொகுத்தல் தொடர்பான வழிகாட்டல்களுக்கு அமைய வெளிநாட்டு வங்கித்தொழில் பிரிவிலுள்ள வதியாதோர் வசமுள்ள வெளிநின்ற இலங்கை அபிவிருத்தி முறிகள் வெளிநாட்டு படுகடனின் கீழ் வகைப்படுத்தப்பட்டதுடன் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளில் உள்ள இலங்கை அரசாங்கத்தின் வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் தொடர்பில் வதியோர் வசமுள்ளவை உள்நாட்டு படுகடனின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) தற்காலிகமானது

(இ) 2013 மார்ச்சில் சிறிலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனத்திற்கு மூலதனமயப் படுத்துவதற்காக வெளியிடப்பட்ட ரூ. 13,125 மில்லியன் (2018 யூன் 01இல் முதிர்ச்சியடைந்தது) மற்றும் 2012சனவரியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வெளியிடப்பட்ட ரூ. 78,441 மில்லியன் (இதில் ரூ. 21,778 மில்லியன் 2017 சனவரி 01இல் முதிர்ச்சியடைந்திருந்ததுடன் தற்போதைய வெளிநின்ற பெறுமதியானது ரூ. 56,662 மில்லியன்) பெறுமதி கொண்ட அரசாங்க திறைசேறி முறிகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது.


(ஈ) வியாபாரங்கள் மற்றும் தனிநபர்கள் வசமுள்ள இலங்கை அபிவிருத்தி முறிகளுக்கான சீராக்கங்களின் காரணமாக 2017இலிருந்து வங்கித்தொழில் மற்றும் வங்கியல்லா தொழில் துறைகளின் வசமுள்ள உள்நாட்டு படுகடனின் உள்ளமைப்பானது திருத்தப்பட்டது.

(உ) 2018 மற்றும் 2019 இற்கான தரவுகளுக்கு 2021 மார்ச் 16ஆம் நாளன்று தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களத்தால் வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

*மூலங்கள்:* நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

மொத்த உள்நாட்டுப் படுகடனில் குறுங்காலப் படுகடனின் பங்கானது திறைசேரி உண்டியல்களின் வெளிநின்ற இருப்பில் ஏற்பட்ட அதிகரிப்பின் முக்கிய காரணமாக 2019 இறுதியின் 18.6 சதவீதத்திலிருந்து 2020 இறுதியில் 24.2 சதவீதத்திற்கு அதிகரித்திருந்தது. திறைசேரி உண்டியல்களின் வெளிநின்ற இருப்பானது 2019 இறுதியின் ரூ. 873.9 பில்லியனிலிருந்து 2020 இறுதியின் ரூ.1,620.7 பில்லியனிற்கு 85.4 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. திறைசேரி முறிகளின் வெளிநின்ற நிலுவையானது உள்நாட்டு படுகடன் சொத்துப்பட்டியலில் தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தியிருந்ததுடன் 2019 இறுதியின் 67.4 சதவீதத்துடன் (ரூ.4,606.2 பில்லியன்) ஒப்பிடுகையில் 2020 இறுதியில் 63.0 சதவீதத்திற்கு (ரூ.5,713.3 பில்லியன்) பங்கிற்கு வகைகூறியிருந்தது. இலங்கை அபிவிருத்தி முறிகளின் வெளிநின்ற இருப்பானது 2019 இறுதியின் ரூ.559.3


வரைபடம் 6.6
மத்திய அரசின் வெளிநின்ற உள்நாட்டு படுகடனின் உள்ளமைப்பு - 2020




*மூலங்கள்:* நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

6

வரைபடம் 6.7
மத்திய அரசின் வெளிநின்ற வெளிநாட்டு படுகடனின் உள்ளமைப்பு - 2020





*மூலங்கள்:* நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

பில்லியனிலிருந்து 2020 இறுதியின் ரூ. 486.9 பில்லியனிற்கு வீழ்ச்சியடைந்திருந்த அதேவேளை கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளிலிருந்தான படுகடனின் வெளிநின்ற மீதியானது 2019 இறுதியின் ரூ.168.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020 இறுதியில் ரூ.227.4 பில்லியனிற்கு அதிகரித்திருந்தது. மத்திய வங்கி மற்றும் வர்த்தக வங்கிகளின் வசமுள்ள வெளிநின்ற படுகடனின் கணிசமான அதிரிப்பை பிரதிபலித்து உள்நாட்டு படுகடனின் 52.2 சதவீதத்திற்கு வகைக்கூறியிருந்த வங்கித்தொழில் துறையிலிருந்தான வெளிநின்ற படுகடனானது 2019 இறுதியின் ரூ.2,888.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020 இறுதியில் ரூ.4,735.7 பில்லியனிற்கு 64.0 சதவீதத்தால் கணிசமாக அதிகரித்திருந்தது. வங்கித்தொழில் அல்லாத துறைகளின் வசமுள்ள உள்நாட்டு படுகடன் 2019 இறுதியின் ரூ.3,941.8 பில்லியனிலிருந்து ரூ.4,329.3 பில்லியனிற்கு 9.8 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் உள்நாட்டு படுகடனின் 47.8 சதவீதத்திற்கு வகைகூறியிருந்தது. இலங்கை அபிவிருத்தி முறிகளின் தீர்ப்பனவுகளின் காரணமாக வெளிநாட்டு நாணய வடிவில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டு படுகடனானது 2019 இறுதியின் ரூ.728.2 பில்லியனிலிருந்து (ஐ.அ.டொ. 4,009.4 மில்லியன்) 2020 இறுதியில் ரூ.719.3 பில்லியனிற்கு (ஐ.அ.டொ. 3,858.6 மில்லியன்) வீழ்ச்சியடைந்திருந்தது. இலங்கை அபிவிருத்தி முறிகளின் வெளிநின்ற மீதியானது 2019 இறுதியின் ரூ. 560.2 பில்லியனிலிருந்து (ஐ.அ.டொ. 3,084.4 மில்லியன்) 2020 இறுதியில் ரூ. 491.9 பில்லியனிற்கு (ஐ.அ.டொ. 2,638.6 மில்லியன்) வீழ்ச்சியடைந்திருந்தது.[7] கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளின் கடன்களின் வெளிநின்ற மீதியானது 2019 இறுதியின் ரூ.168.0 பில்லியனிலிருந்து (ஐ.அ.டொ. 925.0 மில்லியன்) 2020 இறுதியில் ரூ.227.4 பில்லியனிற்கு (ஐ.அ.டொ. 1,220 மில்லியன்) அதிகரித்திருந்தது.

**வெளிநின்ற வெளிநாட்டு மத்திய அரச படுகடனானது முக்கியமாக 2020இல் வெளிநாட்டு நிதியீட்டத்திற்கான வரையறுக்கப்பட்ட அணுகல்களுக்கு மத்தியில் வெளிநாட்டு படுகடனின் தேறிய மீள்கொடுப்பனவுகளின் தாக்கத்தை பிரதிபலித்தது 2019 இறுதியின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 41.3 சதவீதத்திலிருந்து 2020 இறுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 40.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருந்தது.** பெயரளவு நியதிகளில், வெளிநின்ற மத்திய அரச படுகடன் 2019 இறுதியின் ரூ.6,201.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020 இறுதியில் ரூ.6,052.2 பில்லியனிற்கு வீழ்ச்சியடைந்திருந்தது. வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு கடன்பாடுகள் உள்ளடங்கலாக வெளிநின்ற சலுகையல்லா படுகடன் 2019 இறுதியின் ரூ.3,433.8 பில்லியனிலிருந்து 2020 இறுதியில் ரூ.3,064.1 பில்லியனிற்கு 10.8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. மொத்த வெளிநாட்டு படுகடனில் உள்ள சலுகையல்லா படுகடனின் பங்கானது 2019 இறுதியின் 55.4 சதவீதத்திலிருந்து 2020 இறுதியில் 50.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருந்தது. சலுகையல்லா படுகடனின் இந்த வீழ்ச்சிக்கு முக்கியமாக ஆண்டுகாலப்பகுதியில் வெளிநாட்டு வர்த்தக கடன்பாடுகளின் மீள்கொடுப்பனவுகள் காரணமாக அமைவதுடன் இது, 2020ஆம் ஆண்டு ஒத்தோபரில் ஐ.அ.டொலர் 1.0 பில்லியன் பெறுமதியான நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் தீர்ப்பனவுகளையும் உள்ளடக்கியிருந்தது. மொத்த வெளிநாட்டு மத்திய அரச படுகடனில் உள்ள சலுகையல்லா படுகடனின் வெளிநின்ற மீதியானது 2019 இறுதியின் ரூ.2,767.5 பில்லியனிலிருந்து ரூ.2,988.1 பில்லியனிற்கு 8.0 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் 2019 இறுதியின் 44.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2020 இறுதியில் மொத்த வெளிநாட்டு படுகடனின் 49.4 சதவீதத்திற்கு வகைகூறியிருந்தது.

**வெளிநாட்டு நாணயத்தின் வடிவில் குறித்துரைக்கப்பட்ட படுகடனிற்கு எதிராக இலங்கை ரூபாவின் வேறுபாட்டின் விளைவாக வெளிநாட்டு நாணயத்தின் வடிவில் குறித்துரைக்கப்பட்ட வெளிநின்ற மத்திய அரச படுகடனானது 2020இல் வெளிநின்ற மத்திய அரச படுகடனின் ரூபாய்**

வரைபடம் 6.8
மத்திய அரசின் மொத்த வெளிநின்ற படுகடனின் நாணய உள்ளமைப்பு - 2020




*மூலங்கள்:* நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

7 வெளிநாட்டு நாணய வடிவில் குறித்துரைக்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகளின் வெளிநின்ற மீதியானது வதியாதோர் வசமுள்ள இலங்கை அபிவிருத்தி முறிகள் மற்றும் வதிவோர் வசமுள்ள இலங்கை அபிவிருத்தி முறிகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

**பெறுமதியை ரூ.355.7 பில்லியனால் அதிகரித்திருந்தது.** இது வெளிநின்ற வெளிநாட்டு படுகடன் மீதான செலாவணி சமநிலை வேறுபாட்டின் காரணமாக ஏற்பட்ட ரூ.329.9 பில்லியன் மற்றும் வெளிநாட்டு நாணய வடிவில் குறித்துரைக்கப்பட்ட வெளிநின்ற உள்நாட்டுப் படுகடன் மீதான செலாவணி சமநிலை வேறுபாட்டின் காரணமாக ஏற்பட்ட ரூ. 25.8 பில்லியனையும் உள்ளடக்கியிருந்தது. ஐ.அ.டொலருக்கு எதிராக இலங்கை ரூபாய் 2.6 சதவீதத்தினால் தேய்வடைந்திருந்தமை 2020 இறுதியின் செலாவணி சமநிலைத் தாக்கத்திற்கு பிரதானமாக பங்களித்திருந்தது. பொதுவாக அரசாங்கத்திற்கு வெளிநாட்டு நாணய வடிவிலான பாய்ச்சல்களை பயன்படுத்துவதன் ஊடாக வெளிநாட்டு நாணய வடிவில் குறித்துரைக்கப்பட்ட படுகடனானது தீர்ப்பனவு செய்யப்படுவதனால் வெளிநின்ற வெளிநாட்டு நாணய படுகடன் மீதான ரூபாவின் பெறுமதித் தேய்வின் தாக்கமானது பெயரளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். எனினும், நோய்த்தொற்றின் காரணமாக 2020இல் அரசாங்கத்திற்கான வெளிநாட்டு செலாவணிப் உட்பாய்ச்சல்களில் வீழ்ச்சி ஏற்பட்டிருந்த போதிலும் 2020இல் படுகடன் பணிக் கொடுப்பனவு நோக்கங்களிற்காக மத்திய வங்கியிடமிருந்து வெளிநாட்டு செலாவணியை கொள்வனவு செய்வதற்காக அரசாங்கம் கணிசமானளவான ரூபா நிதியங்களை பயன்படுத்தியிருந்தது.

## மத்திய அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

**வட்டிக்கொடுப்பனவுகள் அதிகரித்தமைக்கு மத்தியில் கடன் தீர்ப்பனவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக மத்திய அரசின் மொத்த படுகடன் பணிக்கொடுப்பனவுகள் 2019இன் ரூ.2,022.5 பில்லியனிலிருந்து 2020இல் ரூ.1,941.4 பில்லியனிற்கு குறைவடைந்திருந்தது.** உள்நாட்டுப் படுகடன் மீள்கொடுப்பனவுகள் 2019இன் ரூ.546.3 பில்லியனிலிருந்து

அட்டவணை 6.5
மத்திய அரசின் படுகடன் பணிக் கொடுப்பனவுகள்


ரூ.மில்லியன்

| விடயம் | 2017 | 2018 | 2019 (அ) | 2020 (ஆ) |
|---|---|---|---|---|
| **படுகடன் பணிக் கொடுப்பனவுகள்** | **1,603,049** | **2,088,551** | **2,022,507** | **1,941,373** |
| உள்நாடு | 1,213,498 | 1,561,363 | 1,213,698 | 1,169,522 |
| வெளிநாடு | 389,551 | 527,188 | 808,809 | 771,851 |
| **கடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகள்** | **867,484** | **1,236,361** | **1,121,155** | **961,071** |
| உள்நாடு | 642,875 | 921,881 | 546,315 | 455,899 |
| வெளிநாடு | 224,609 | 314,480 | 574,839 | 505,172 |
| **வட்டிக் கொடுப்பனவுகள்** | **735,566** | **852,190** | **901,353** | **980,302** |
| உள்நாடு | 570,623 | 639,482 | 667,383 | 713,623 |
| குறுங்காலம் | 81,275 | 74,525 | 81,029 | 77,965 |
| நடுத்தர மற்றும் நீண்டகாலம் | 489,348 | 564,957 | 586,354 | 635,658 |
| வெளிநாடு | 164,942 | 212,708 | 233,970 | 266,679 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலங்கள்:* நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 6.9
மத்திய அரசின் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் (மொ.உ.உ இன் சதவீதமாக)




*மூலங்கள்:* நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

2020இல் ரூ.455.9 பில்லியனிற்கு 16.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு திறைச்சேரி முறிகளின் முதிர்வில் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாகும். வெளிநாட்டு படுகடன் செலுத்தல்கள் 2019இன் ஐ.அ.டொலர் 1,500 மில்லியன் பெறுமதி கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் முதிர்விற்கு எதிராக 2020இல் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் ஐ.அ.டொலர் 1,000 மில்லியன் முதிர்வினை பிரதானமாக வெளிப்படுத்தி 2019இன் ரூ.574.8 பில்லியனிலிருந்து 2020இல் ரூ.505.2 பில்லியனிற்கு 12.1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. அதன் விளைவாக, மொத்த படுகடன் பணிக்கொடுப்பனவுகளில் 49.5 சதவீதத்திற்கு வகைகூறிய மொத்த தீர்ப்பனவு செலுத்தல்கள் 2019இன் ரூ.1,121.2 பில்லியனிலிருந்து 2020இல் ரூ.961.1 பில்லியனிற்கு 14.3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. மாறாக, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வெளிநின்ற படுகடன்களுக்கான அதிகரித்த வட்டிச் செலுத்தல்களின் முக்கிய காரணமாக மத்திய அரச படுகடன் மீதான வட்டிக்கொடுப்பனவுகள் 2019இன் ரூ.901.4 பில்லியனிலிருந்து 2020இல் ரூ.980.3 பில்லியனிற்கு 8.8 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அரசாங்க பிணையங்கள் மீதான விளைவுகள் உள்ளடங்கலாக உள்நாட்டு வட்டிவீதங்களில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு மத்தியில் வெளிநின்ற உள்நாட்டு படுகடனின் கணிசமான அதிகரிப்பின் காரணமாக மத்திய அரச உள்நாட்டு படுகடன் மீதான வட்டிச் செலுத்தல்கள் 2019இன் ரூ.667.4 பில்லியனிலிருந்து 2020இல் ரூ.713.6 பில்லியனிற்கு 6.9 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. வெளிநாட்டு படுகடன் மீதான வட்டிச் செலுத்தல்கள் சமத்துவ மாற்றங்களின் தாக்கத்துடன் இணைந்து நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் மீதான அதிகரித்த வட்டிக்கொடுப்பனவுகளின் முக்கிய காரணமாக 2019இன் ரூ.234.0 பில்லியனிலிருந்து 2020இல் ரூ.266.7 பில்லியனிற்கு அதிகரித்திருந்தது. ஒட்டுமொத்தமாக, உள்நாட்டு படுகடன் பணிக்கொடுப்பனவுகள் 2019இன் ரூ.1,213.7 பில்லியனிலிருந்து

6

### அட்டவணை 6.6
### மத்திய அரசின் படுகடன் குறிகாட்டிகள்

| குறிகாட்டிகள் | 2017 | 2018 (அ) | 2019(ஆ) | 2020 (ஆ) |
|---|---|---|---|---|
| மத்திய அரச படுகடன்/மொ.உ.உ | 77.9 | 84.2 | 86.8 | 101.0 |
| உள்நாட்டு படுகடன்/மொ.உ.உ (இ) | 42.5 | 42.5 | 45.5 | 60.6 |
| வெளிநாட்டு படுகடன்/மொ.உ.உ | 35.4 | 41.7 | 41.3 | 40.4 |
| உள்நாட்டு படுகடன்/ மத்திய அரச படுகடன் | 54.6 | 50.5 | 52.4 | 60.0 |
| வெளிநாட்டு படுகடன்/ மத்திய அரச படுகடன் | 45.4 | 49.5 | 47.6 | 40.0 |
| வெளிநாட்டு படுகடன்/ஏற்றுமதிகள் (ஈ) | 162.2 | 181.0 | 178.6 | 250.2 |
| படுகடன் பணிகள்/மொ.உ.உ | 12.0 | 14.6 | 13.5 | 13.0 |
| படுகடன் பணிகள்/அரசிறை | 87.5 | 108.8 | 107.0 | 141.9 |
| இதில் உள்நாட்டு படுகடன் பணிகள்/அரசிறை | 66.3 | 81.3 | 64.2 | 85.5 |
| படுகடன் பணிகள்/அரச செலவினம் (உ) | 46.6 | 53.1 | 45.4 | 48.5 |
| இதில் உள்நாட்டு படுகடன் பணிகள்/அரச செலவினம் (உ) | 35.3 | 39.7 | 27.2 | 29.2 |
| வெளிநாட்டு படுகடன் பணிகள்/ஏற்றுமதிகள் (ஈ) | 13.4 | 16.0 | 23.3 | 31.9 |
| வட்டிச் செலுத்தல்கள்/மொ.உ.உ | 5.5 | 6.0 | 6.0 | 6.5 |
| வட்டிச் செலுத்தல்கள்/அரச செலவினம் | 21.4 | 21.7 | 20.2 | 24.5 |
| உள்நாட்டு வட்டிச் செலுத்தல்கள்/மொ.உ.உ | 4.3 | 4.5 | 4.4 | 4.8 |
| வெளிநாட்டு வட்டிச் செலுத்தல்கள்/மொ.உ.உ | 1.2 | 1.5 | 1.6 | 1.8 |
| வட்டிச் செலுத்தல்கள்/அரச மீண்டெழும் செலவினம் | 38.2 | 40.8 | 37.2 | 38.5 |
| வெளிநாட்டு வட்டிச் செலுத்தல்கள்/ ஏற்றுமதிகள் (ஈ) | 5.7 | 6.5 | 6.7 | 11.0 |

(அ) 2018 மற்றும் 2019 இற்கான தரவுகளுக்கு 2021 மார்ச் 16ஆம் நாளன்று தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களத்தால் வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
(ஆ) தற்காலிகமானது
(இ) 2013 மார்ச்சில் சிறிலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனத்திற்கு மூலதனமயப் படுத்துவதற்காக வெளியிடப்பட்ட ரூ. 13,125 மில்லியன் (2018 யூன் 01இல் முதிர்ச்சியடைந்தது) மற்றும் 2012இல் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வெளியிடப்பட்ட ரூ. 78,441 மில்லியன் (இதில் ரூ. 21,778 மில்லியன் 2017 சனவரி 01இல் முதிர்ச்சியடைந்திருந்ததுடன் 2019இன் இறுதியில் உள்ளவாறான வெளிநின்ற பெறுமதியானது ரூ. 56,662 மில்லியன்) பெறுமதி கொண்ட அரசாங்க திறைசேறி முறிகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது.
(ஈ) பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதிகள்
(உ) அரச செலவினம் கடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகளை உள்ளடக்குகின்றது.

*மூலங்கள்:* நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

ரூ.1,169.5 பில்லியனிற்கு வீழ்ச்சியடைந்திருந்ததுடன் வெளிநாட்டு படுகடன் பணிக்கொடுப்பனவுகள் 2019இன் ரூ.808.8 பில்லியனிலிருந்து 2020இல் ரூ.771.9 பில்லியனிற்கு 4.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது.

**மத்திய அரச படுகடன் குறிக்காட்டிகள் 2020இல் கலந்த செயலாற்றத்தைக் காட்டியிருந்தன.** மொத்த படுகடன் பணிக்கொடுப்பனவுகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக முன்னைய ஆண்டின் 13.5 சதவீதத்திலிருந்து 2020இல் 13.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக உள்நாட்டு படுகடன் மீதான தீர்ப்பனவு செலுத்தல்கள் 2019இன் 3.5 சதவீதத்திலிருந்து 2020இல் 3.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருந்து. வெளிநாட்டு படுகடன் மீதான தீர்ப்பனவு செலுத்தல்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 2019இன் 3.8 சதவீதத்திலிருந்து 2020இல் 3.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருந்தது. எனினும், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மொத்த வட்டி செலுத்தல்கள் 2019இன் 6.0 சதவீதத்திலிருந்து 2020இல் 6.5 சதவீதத்திற்கு அதிகரித்திருந்தது. குறிப்பாக அரசாங்க பிணையங்கள் மீதான விளைவுகள் உள்ளடங்கலாக உள்நாட்டு வட்டி வீதங்கள் கணிசமாக வீழ்ச்சியடைந்தமைக்கு மத்தியில் வெளிநின்ற உள்நாட்டு படுகடனின் அதிகரிப்பின் காரணமாக உள்நாட்டு படுகடன் மீதான வட்டி செலுத்தல்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 2019இன் 4.4 சதவீதத்திலிருந்து 2020இல் 4.8 சதவீதத்திற்கு அதிகரித்திருந்தது. வெளிநாட்டு படுகடன் மீதான வட்டிச் செலுத்தல்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக முன்னைய ஆண்டின் 1.6 சதவீதத்திலிருந்து 2020இல் 1.8 சதவீதத்திற்கு அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020இல் பண்டங்கள் மற்றும் பணிகளின் ஏற்றமதிகள் வீழ்ச்சியடைந்தமையின் முக்கிய காரணமாக பண்டங்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதிகளுக்கான வெளிநாட்டு படுகடன் பணிக்கொடுப்பனவுகளின் விகிதமானது 2019இன் 23.3 சதவீதத்திலிருந்து 2020இல் 31.9 சதவீதத்திற்கு அதிகரித்திருந்ததுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020இல் வெளிநாட்டு படுகடன் பணிக் கொடுப்பனவுகளின் வீழ்ச்சியினால் ஏற்பட்ட தாக்கத்தை விஞ்சியிருந்தது. அதேவேளை, அரசிறைக்கான மத்திய அரச படுகடன் பணிக்கொடுப்பனவுகளின் விகிதமானது 2020இல் அரசிறையின் கணிசமான வீழ்ச்சியை பிரதானமாக வெளிப்படுத்தி 2019இன் 107.0 சதவீதத்திலிருந்து 2020இல் 141.9 சதவீதத்திற்கு மோசமடைந்திருந்தது.

## வெளிநின்ற பொதுப் படுகடன்

**மத்திய அரசப் படுகடன், அரசிற்கு சொந்தமான வியாபார தொழில் முயற்சிகளால்[8] பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு செயற்றிட்ட கடன்கள் மற்றும் பொது உத்தரவாதப்படுத்தப்பட்ட படுகடன் என்பவற்றை உள்ளடக்கிய வெளிநின்ற பொதுப் படுகடன் 2019 இறுதியின் 94.3 சதவீதத்திலிருந்து 2020இன் இறுதியில் 109.7 சதவீதத்திற்கு கணிசமாக அதிகரித்திருந்தது.** 2020இல் சுருக்கமடைந்த பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் இணைந்து மத்திய அரச படுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பின் முக்கிய காரணமாக இது அதிகரித்திருந்தது. பெயரளவு நியதிகளில், வெளிநின்ற பொதுப் படுகடன் 2019இன் இறுதியிலுள்ளவாறான ரூ.14,155.3 பில்லியனிலிருந்து 2020இன் இறுதியில் ரூ.16,427.1 பில்லியனிற்கு அதிகரித்திருந்தது. பொதுப் படுகடனின் பாரிய கூறான வெளிநின்ற மத்திய அரச படுகடன் 2019 இறுதியின் ரூ.13,031.5 பில்லியனிலிருந்து 2020இன் இறுதியில் ரூ.15,117.2 பில்லியனிற்கு அதிகரித்திருந்ததுடன் இது மொத்த படுகடனில் 92.0

8 பொது உத்தரவாதமில்லாமல் அரசிற்கு சொந்தமான வியாபார தொழில் முயற்சிகளால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு செயற்றிட்ட கடன்கள்.

அட்டவணை 6.7
வெளிநின்ற பொதுப் படுகடன் (ஆண்டிறுதியில் உள்ளவாறு)

| விடயம் | 2017 | 2018 | 2019 (அ) | 2020 |
|---|---|---|---|---|
| ரூ.மில்லியன் | | | | |
| **மத்திய அரசாங்கத்தின் மொத்த வெளிநின்ற படுகடன் (ஆ)** | 10,382,832 | 12,030,548 | 13,031,543 | 15,117,247 |
| **பொது உத்தரவாதமின்றி அரசிற்கு சொந்தமான தொழில் முயற்சிகளினால் பெற்றுக் கொள்ளப்பட்ட வெளிநாட்டு செயற்றிட்ட கடன்கள்** | 330,221 | 366,130 | 345,453 | 323,510 |
| வரையறுக்கப்பட்ட (இலங்கை) விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் | 23,955 | 24,964 | 22,317 | 22,189 |
| இலங்கை மின்சாரசபை | 155,535 | 168,649 | 150,418 | 136,720 |
| இலங்கை துறைமுக அதிகாரசபை | 150,730 | 172,517 | 172,717 | 164,602 |
| **பொது உத்தரவாதமளிக்கப்பட்ட படுகடன் (இ) (ஈ)** | 590,492 | 781,741 | 778,305 | 986,391 |
| வரையறுக்கப்பட்ட (இலங்கை) விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் | 9,330 | 10,829 | 16,532 | 34,801 |
| இலங்கை மின்சாரசபை | 15,153 | 21,376 | 25,212 | 70,559 |
| இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | 207,622 | 333,869 | 297,220 | 345,500 |
| வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் | 11,436 | 13,098 | 12,613 | 12,505 |
| ஜெனரல் சேர் ஜேன் கொத்தவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் | 28,060 | 36,843 | 35,311 | 35,562 |
| வரையறுக்கப்பட்ட இலங்கை நிலக்கரி (தனியார்) கம்பனி | 5,886 | 11,000 | 5,398 | 9,692 |
| தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை | 63,836 | 85,541 | 102,339 | 138,180 |
| நெல் சந்தைப்படுத்தல் சபை | 11,087 | 11,436 | 11,420 | 2,023 |
| வீதி அபிவிருத்தி அதிகார சபை | 162,701 | 189,022 | 206,563 | 262,015 |
| வரையறுக்கப்பட்ட சிறிலங்கன் எயர்லைன்ஸ் | 26,750 | 31,981 | 32,083 | 43,530 |
| ஏனைய கூட்டுத்தாபனங்கள் | 48,631 | 36,746 | 33,615 | 32,023 |
| **பொதுப்படுகடன்** | 11,303,545 | 13,178,418 | 14,155,301 | 16,427,148 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக (உ) | | | | |
| மொத்த வெளிநின்ற மத்திய அரசாங்க படுகடன் (ஆ) | 77.9 | 84.2 | 86.8 | 101.0 |
| பொது உத்தரவாதமின்றி அரசிற்குச் சொந்தமான வியாபார தொழில் முயற்சிகளால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு செயற்றிட்டக் கடன்கள் | 2.5 | 2.6 | 2.3 | 2.1 |
| பொது உத்தரவாதமளிக்கப்பட்ட படுகடன் (இ) (ஈ) | 4.4 | 5.5 | 5.2 | 6.6 |
| **பொதுப் படுகடன்** | 84.8 | 92.2 | 94.3 | 109.7 |

(அ) தற்காலிகமானது

(ஆ) 2013 மார்ச்சில் சிறிலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனத்திற்கு மூலதனமயப் படுத்துவதற்காக வெளியிடப்பட்ட ரூ. 13,125 மில்லியன் (2018 யூன் 01இல் முதிர்ச்சியடைந்தது) மற்றும் 2012 சனவரியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வெளியிடப்பட்ட ரூ. 78,441 மில்லியன் (இதில் ரூ. 21,778 மில்லியன் 2017 சனவரி 01இல் முதிர்ச்சியடைந்திருந்ததுடன் தற்போதைய வெளிநின்ற பெறுமதியானது ரூ.56,662 மில்லியனாகும். பெறுமதி கொண்ட அரசாங்க திறைசேறி முறிகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

(இ) நிதியல்லா பொதுக் கூட்டுத்தாபனங்களை மட்டும் உள்ளடக்கியுள்ளது.

(ஈ) 2014 யூனில் சிறிலங்கன் எயார்லைன்சினால் வெளியிடப்பட்ட 175 மில்லியன் ஐ.அ.டொலர் பெறுமதியான பன்னாட்டு முறியினை உள்ளடக்கியுள்ளது. இது 2019 யூன் மாதத்தில் முதிர்ச்சியடைந்திருந்ததுடன் மேலும் ஐந்து வருடங்களுக்காக மீண்டும் மீள்வெளியிடப்பட்டது.

(உ) 2018 மற்றும் 2019 இற்கான தரவுகளுக்கு 2021 மார்ச் 16இல் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட மீள்திருத்தப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

*மூலங்கள்:* நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

சதவீதத்திற்கு வகைகூறியிருந்தது. உத்தரவாதப்படுத்தப்பட்ட பொதுப்படுகடன் 2019இன் இறுதியில் காணப்பட்ட ரூ.778.3 பில்லியனிலிருந்து 2020இன் இறுதியில் ரூ.986.4 பில்லியனிற்கு 26.7 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் மொத்த வெளிநின்ற பொதுப் படுகடனில் 6.0 சதவீதத்திற்கு வகைகூறியிருந்தது. எனினும், அரசிற்கு சொந்தமான வியாபாரத் தொழில் முயற்சிகளால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செயற்றிட்ட கடன்களுடன் தொடர்புடைய வெளிநின்ற படுகடனானது இலங்கை துறைமுக அதிகார சபை மற்றும் இலங்கை மின்சார சபை என்பவற்றின் வெளிநின்ற கடன்களின் மீள்செலுத்தல்களின் காரணமாக 2019இன் இறுதியில் காணப்பட்ட ரூ.345.5 பில்லியனிலிருந்து 2020இன் இறுதியில் 323.5 பில்லியனிற்கு வீழ்ச்சியடைந்திருந்தது. அரசிற்கு சொந்தமான வியாபாரத் தொழில் முயற்சிகளின் படுகடனில் இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் இலங்கை மின்சார சபை என்பன முக்கிய பகுதியினராக காணப்படுவதுடன் 2020இன் இறுதியில் முறையே 50.9 சதவீதம் மற்றும் 42.3 சதவீதத்திற்கு வகைகூறியிருந்தன.

## 6.5 உப தேசிய அரசாங்கங்களின் வரவு செலவுத் திட்ட தொழிற்பாடுகள்

### கொள்கைப் போக்குகளும் உப தேசிய அரசாங்கங்களினால் மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகளும்

**மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் என்பவற்றை உள்ளடக்கிய உப தேசிய அரசாங்கங்களானது[9] கொவிட்-19 நோய்த்தொற்றிலிருந்தான தடங்கல்களுக்கு மத்தியில் 2020இல் தொடர்ந்தும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்திருந்தது.** ஆண்டு காலப்பகுதியில், "புற நெகும", உள்ளக அபிவிருத்தி ஆதரவுச் செயற்றிட்டம், கொழும்பு பெரும்பாக கழிவு நீர் முகாமைத்துவ செயற்றிட்டம் போன்ற உள்ளூராட்சி மேம்படுத்தல் துறைச் செயற்றிட்டம் மற்றும் ஏனைய பல வீதி அபிவிருத்திச் செயற்றிட்டங்கள்

9 2020இன் இறுதியில், உப தேசிய அரசாங்கங்களானது ஒன்பது மாகாண சபைகள் மற்றும் 341 உள்ளூராட்சிசபைகளை உள்ளடக்கியிருந்ததுடன் இவ்வுள்ளூராட்சியானது 24 மாநகர சபைகள், 41 நகர சபைகள் மற்றும் 276 பிரதேச சபைகளை உள்ளடக்கியிருந்தது.

என்பன ஆண்டு காலப்பகுதியில் தொடர்ந்திருந்ததுடன் அதன் ஊடாக நாட்டின் பொருளாதார உட்கட்டமைப்புக்களை மேம்படுத்தியிருந்தது. ஆண்டுகாலப்பகுதியில் உப தேசிய மட்டங்களின் சமூக உட்கட்டமைப்பை மேம்படுத்தும் நோக்கில் முதன்மை சுகாதார கவனிப்பு முறைமையை பலப்படுத்தும் செயற்றிட்டம் மற்றும் பொதுக்கல்வி நவீனமயப்படுத்தல் செயற்றிட்டம் என்பனவும் தொடரப்பட்டன.

**2020இல் நிதியியல் ஆணைக்குழுவானது சிறந்த பொது முதலீட்டு அமுலாக்கள் மற்றும் உப தேசிய மட்டங்களின் பணி வழங்கல்கள் என்பவற்றின் ஊடாக நாட்டில் சமமான பிராந்திய அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறுபட்ட கொள்கை முன்மொழிவுகளை மேற்கொண்டிருந்தது.** தேசிய மற்றும் உப தேசிய அரசாங்கங்களில் தீர்மானம் மேற்கொள்வதற்காக நிதியியல் ஆணைக்குழுவானது பொதுவானதொரு சட்டகமொன்றை தாபிப்பதற்கு முன்மொழிந்திருந்த அதேவேளை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மாகாண சபைகளுக்கு நேரடியாக நிதியினை பகிர்ந்தளித்திருந்தது. நிதியியல் ஆணைக்குழுவானது சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக மாகாணசபைகளுக்கு விசேட மூலதன கொடையை வழங்குவதற்கு முன்மொழிந்திருந்த அதேவேளை பெரும்பாலான நடவடிக்கைகள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் என்பவற்றின் ஊடாக இடம்பெற்று வருவதனால் அத்தகைய நடவடிக்கைக்காக நிரல் அமைச்சுக்களுக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள் முடிவுறுத்தப்பட்டன. மேலும், மத்திய அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தின் மீதான சுமையை குறைக்கும் நோக்கில் வருமானத்தை உருவாக்கும் புதிய மூலங்களை அடையாளங்காண்பதன் ஊடாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் என்பவற்றை வலுப்படுத்த வேண்டுமென ஆணைக்குழு முன்மொழிந்திருந்தது.



## மாகாண சபைகளில் வரவு செலவுத்திட்ட தொழிற்பாடுகள்

**உலகளாவிய நோய்த்தொற்றிற்கு மத்தியில் பொருளாதார நடவடிக்கைகளின் மெதுவடைவின் தாக்கத்தை பிரதிபலித்து மாகாண சபைகளின் அரசிறை சேகரிப்பானது 2020இல் கணிசமாக வீழ்ச்சியடைந்திருந்தது.** மாகாண சபைகளின் மொத்த அரசிறை 2019இன் ரூ.91.3 பில்லியனிலிருந்து 2020இல் ரூ.52.2 பில்லியனிற்கு வீழ்ச்சியடைந்திருந்தது. 2019இன் ரூ.34.9 பில்லியனிலிருந்து 2020இல் ரூ.2.7 பில்லியனிற்கு மத்திய அரசின் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி வருவாயிலிருந்தான பரிமாற்றங்களின் கணிசமான வீழ்ச்சியை பிரதிபலித்து வரி அரசிறையானது 2019இன் ரூ.81.5 பில்லியனிலிருந்து 2020இல் 43.1 பில்லியனிற்கு வீழ்ச்சியடைந்திருந்தது. தேசத்தை கட்டியெழுப்பும் வரி வருவாயிலிருந்தான அரசிறையின் பங்கானது 2019இன் 42.8 சதவீதத்திலிருந்து 2020இல் 6.3 சதவீதத்திற்கு

அட்டவணை 6.8
மாகாணசபைகளுக்கான வரவு செலவுத்திட்ட வெளிப்பாடு

ரூ.மில்லியன்

| விடயம் | 2017 | 2018 (அ) | 2019 (அ) | 2020 (ஆ) |
|---|---|---|---|---|
| **மொத்த அரசிறை** | **86,978** | **88,689** | **91,344** | **52,245** |
| வரி அரசிறை | 77,691 | 82,228 | 81,499 | 43,096 |
| வரியல்லா அரசிறை | 9,287 | 6,461 | 9,845 | 9,149 |
| **மொத்த செலவினம்** | **287,838** | **292,265** | **310,124** | **337,006** |
| மீண்டெழும் செலவினம் | 241,338 | 251,552 | 286,884 | 312,079 |
| இதில் தனியாள் ஊதியம் | 187,367 | 198,129 | 219,698 | 239,980 |
| மூலதனச்செலவினம் | 46,500 | 40,713 | 23,240 | 24,927 |
| **மத்திய அரசின் மாற்றல்கள்** | **200,860** | **203,576** | **218,780** | **284,761** |
| மொத்த கொடைகள் | 166,348 | 180,095 | 199,968 | 265,593 |
| பிரமாணங்களை அடிப்படையாக கொண்ட கொடைகள் | 3,236 | 2,462 | 2,205 | 1,752 |
| குறிப்பாக மாகாணத்திற்கான அபிவிருத்திக் கொடைகள் | 20,250 | 13,536 | 11,376 | 11,004 |
| சிறப்புச் செயற்றிட்டங்களுக்கான பன்னாட்டு கொடைகள் | 11,025 | 7,483 | 5,230 | 6,412 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலங்கள்:* நிதி அமைச்சு
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்களுக்கான இராஜாங்க அமைச்சு

வீழ்ச்சியடைந்திருந்தது. மாகாண சபைகளின் முக்கிய அரசிறை மூலமாக தொடர்ந்து காணப்படுகின்ற ஆதனங்களின் மீதான வரியானது 2019இன் ரூ.32.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020இல் ரூ.27.4 பில்லியனிற்கு அறிக்கையிட்டிருந்தது. அதேவேளை, வரியல்லா வருமானமானது 2019இன் ரூ.9.8 பில்லியனிலிருந்து 2020இல் ரூ.9.1 பில்லியனிற்கு சிறிதளவு வீழ்ச்சியடைந்திருந்தது. அனைத்து மாகாண சபைகளால் சேகரிக்கப்பட்ட மொத்த அரசிறையில் மேல் மாகாண சபையின் அரசிறைப் பங்கானது ஏனைய மாகாண சபைகளுடன் ஒப்பிடுமிடத்து மேல் மாகாணத்தின் பொருளாதார நடவடிக்கைகளை கணிசமாக பாதித்திருந்த கொவிட்-19 நோய்த்தொற்றுடன் தொடர்புடைய அசைவுக் கட்டுப்பாடுகளின் காரணமாக 2019இன் 49.2 சதவீதத்திலிருந்து 2020இல் 46.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருந்தது. ஏனைய மாகாண சபைகளால் சேகரிக்கப்பட்ட அரசிறைகளில் வட மேல் மற்றும் தென் மாகாணங்கள் என்பன மொத்த அரசிறையில் முறையே 10.8 சதவீதம் மற்றும் 10.5 சதவீதத்திற்கு வகைகூறியிருந்தன.

**மாகாண சபைகளின் மொத்தச் செலவினம் 2020 இல் அதிகரித்தமைக்கு மீண்டெழும் செலவினம் அதிகரித்தமையே முக்கிய காரணமாகும்.** பெயரளவு நியதிகளில், மொத்தச் செலவினம் 2019இன் ரூ.310.1 பில்லியனிலிருந்து 2020இல் ரூ.337.0 பில்லியனிற்கு அதிகரித்திருந்த அதேவேளை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 2019இன் 2.1 சதவீதத்திலிருந்து 2020இல் 2.3 சதவீதத்திற்கு அதிகரித்திருந்தது. தனியாள் ஊதியங்கள் மீது ஏற்பட்ட உயர்ந்தளவான செலவினத்தின் காரணமாக மீண்டெழும் செலவினம் 2019இன் ரூ.286.9 பில்லியனிலிருந்து 2020இல்

ரூ.312.1 பில்லியனிற்கு அதிகரித்திருந்தது. அதன்படி, மாகாண சபைகளின் மொத்த மீண்டெழும் செலவினத்தில் 76.9 சதவீதத்திற்கு வகைகூறிய தனியாள் ஊதியங்களானது 2019இன் ரூ.219.7 பில்லியனிலிருந்து 2020இல் ரூ.240.0 பில்லியனிற்கு அதிகரித்திருந்ததுடன் மீண்டெழும் செலவினத்தில் மிகப்பெரும் விடயமாகத் தொடர்ந்தும் விளங்கியது. மாகாண சபைகளின் தனியாள் ஊதியங்களின் ஏறத்தாழ 90 சதவீத்தினை கல்வி மற்றும் சுகாதாரத் துறைகள் ஈர்த்துக்கொண்டிருந்தன. அதேவேளை, மூலதனப் பொருட்களின் கையேற்பு மற்றும் மாகாணங்களின் குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் என்பவற்றின் மீதான செலவினம் இவ்வாண்டுப் பகுதியில் வீழ்ச்சியடைந்திருந்த போதிலும் மூலதனச் செலவினமானது 2019இன் ரூ.23.2 பில்லியனிலிருந்து 2020இல் ரூ.24.9 பில்லியனிற்கு அதிகரித்திருந்தன. 2020இல் உயர்ந்த செலவினங்களை மேற்கொண்ட மாகாண சபைகளிடையே மொத்த மீண்டெழும் செலவினத்தில் மேல், மத்திய மற்றும் வடமேல் மாகாணசபைகள் முறையே 23.3 சதவீதம், 12.3 சதவீதம் மற்றும் 11.9 சதவீத்திற்கு வகைகூறியிருந்தன.

**மத்திய அரசிலிருந்து மாகாண சபைகளுக்கு மேற்கொள்ளப்பட்ட மாற்றல்கள் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்திருந்தன.** சிறப்புச் செயற்றிட்டங்களுக்கான கொடைகள், மாகாண ரீதியாக குறித்துரைக்கப்பட்ட அபிருத்திக் கொடைகள் மற்றும் பிரமாணங்களை அடிப்படையாக கொண்ட கொடைகள் என்பவற்றில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு மத்தியில் தொகை வடிவிலான கொடைகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக மத்திய அரசாங்கத்தின் மாற்றல்கள் 2019இன் ரூ.218.8 பில்லியனிலிருந்து 2020இல் ரூ.284.8 பில்லியனிற்கு அதிகரித்திருந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மத்திய அரசாங்கத்திலிருந்தான மாற்றல்கள் 2019இல் பதிவு செய்யப்பட்ட 1.5 சதவீதத்திலிருந்து 2020இல் 1.9 சதவீதத்திற்கு அதிகரித்திருந்தது. மாகாண சபைகளின் மீண்டெழும் செலவின நிகழ்ச்சித்திட்டங்களில் காணப்படும் மூலவள இடைவெளியினை பூர்த்திசெய்வதற்காக மாகாண சபைகளுக்கு மேற்கொள்ளப்பட்ட மாற்றல்களில் முக்கிய வடிவமாக விளங்கும் தொகை வடிவிலான கொடைகள் ரூ.265.6 பில்லியனாக விளங்கியிருந்ததுடன் மொத்த மாற்றல்களில் 93.3 சதவீதத்தை பிரநிதித்துவப்படுத்தியிருந்தது. மேலும், சிறப்புச் செயற்றிட்டங்களுக்கான கொடைகள் 2019இன் ரூ.5.2 பில்லியனிலிருந்து 2020இல் ரூ.6.4 பில்லியனிற்கு அதிகரித்திருந்தது. மாகாண ரீதியாக குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்திக் கொடைகளின் கீழான மாற்றல்கள் மற்றும் பிரமாணங்களை அடிப்படையாக கொண்ட கொடைகள் என்பவற்றிற்கான மாற்றல்கள் முறையே ரூ.11.0 பில்லியனாகவும் ரூ.1.8 பில்லியனாகவும் விளங்கின. ஆண்டுகாலப்பகுதியில், மாகாண சபைகளின் அரசிறையில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சியின் காரணமாக மத்திய அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தின் மீது மாகாண சபைகள் அதிகரித்தளவில் தங்கியிருந்தமையை பிரதிபலித்து 2020இல் மாகாண சபைகளின் 84.5 சதவீதமான செலவினமானது 2019இன் 70.9 சதவீதத்துடன் ஒப்பிடுமிடத்து மத்திய அரசாங்க மாற்றல்களின் ஊடாக நிதியீட்டம் செய்யப்பட்டது.